உ
சிவமயம்

விசேஷ
விளம்பரத்திற்கு!

இந்துசாதனம்

விசேஷ
விளம்பரத்திற்கு!

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

[புத்தகம் ௫௩] யாழ்ப்பாணம்:— விஷு ௵ மார்கழி ௴ ௮ ௳ (1941 டிசம்பர் 22 திங்கட்கிழமை) [இலக்கம் ௯௯]

குழலும் யாழும்

சுவாமி விபுலானந்தர்

முன்னல்யாழ் பயில்நூல்
நரம்பின் முதிர்சுவையே
பன்னலர் பயிலும்
பரனே பவித்திரனே
கன்னலே அமுதே கார்முகிலே
என்கண்ணா
நின்னலால் இலேன்காண்
என்னை நீ குறிக்கொள்ளே
—நம்மாழ்வார்.

இமயமலைச் சாரலிலுள்ள இத் தவப் பள்ளியிலே, எனது உறையுளுக்கு அணிமையாகப் பேரிக்காய் மரம் ஒன்று முத்துப்போல முகை பரும்பி இலை தெரியாது பூத்திருக்கிறது. அதனடியிற் பச்சைப் பசும் புல்லிலே வடக்கு நோக்கித் திருக்கேதார மலையைப் பார்த்த வண்ணமாக உட்கார்ந்திருக்கிறேன். காலை ஒன்பது மணி. வானம் களங்கமற்றிருக்கிறது. "நீலவிதானத்து நித்திலம் பூப்பந்தரின்" கீழ்ப் பசும்புற் கம்பளத்தின்மீது கவலையற்றிருக்கையிலே, உள்ளமானது இயற்கையின் அழகிலே ஈடுபடுகின்றது. தென்றல் வீசுகின்றது—தமிழ்த் தென்றல — தென்மலையிலிருந்து வந்த தென்றல். நீரருவி மெல்லெனப் பாய்கிறது. மடைப்பள்ளியிலே நெருப்பு எரிகிறது. வண்ணாத்திப்பூச்சி ஒன்று இரானி* (Rose) மலரிலே தேனருந்துகிறது. குறவனொருவன் பச்சைவிறகுக் கட்டை பிரண்டினை இருதோளிலும் வைத்துக் கொண்டு போகிறான். பக்கத்திலுள்ள பாரிசாத மலர்க்கொடி (Honeysuckle)யிலே தேனீக்கள் முரல்கின்றன. ஒரு தேன் வண்டு அணுகி வந்து வலஞ்செய்யப் பலமுறை சுற்றி ஏதோ பழந்தமிழ்ப் பண்ணை இசைத்துப் பின் இடது உள்ளங்கையிலே அமர்ந்து கைவரிகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அச்சமின்றி நட்புக் கொண்டாடுவது இத்தவப் பள்ளியிலுறையும் தேனீக்களுக்குப் பரம்பரைக் குணம். நீலவானத்தையும், காற்றையும், நெருப்பையும், நீரையும், மண்ணையும் ஊன்றி நோக்கிய உள்ளமானது, ஆளுடைய பிள்ளையார், வைகைநதியி லிட்ட திருவேடு போலக் காலம் என்னும் நீரோட்டத்தினை எதிரேறிச் செல்ல முயலுகிறது.

நீரோட்டத்தின் இருமருங்கும் பாட்டிசைக்கும் இசைக் கலைஞோரும், பல்வகை இசைக் கருவிகளைக் கையிலும் தோளிலும் ஏந்திச் செல்லும் பாணர்களும் வரிசையாகக் காணப்படுகின்றனர். அதோ செல்பவர் திருவாரூர் சாமா சாஸ்திரியார். அவருக்குச் சிறிது பின்னாக நிற்பவர் எட்டையபுரம் சமஸ்தானத்து முத்துசாமி தீக்ஷிதர். பக்கத்தில் நிற்பவர் இராமாயணக் கீர்த்தனை செய்த அருணாசலக்கவி. இவர்களோடு உடன் செல்லும் பெரியார் துளஜாமகாராஜா (1763-1787) இவர் க்ஷேத்திரத்தில் ஸ்ரீராமபிரானது திருநாமத்திலே ஈடுபட்டு நெஞ்சினையுருக்கும் கீர்த்தனைகளைப் பாடிச் செல்லும் இப்பெரியார்தான் தியாகராஜையர். முன்னாகச் செல்பவர் தியாகராஜ ஐயரது பாட்டனார் கிரிராஜ கவி. அங்குச் செல்பவர் இசையரசரும், புவியரசருமாகிய ஷாஜிமகாராஜா (1681-171).

ஒரு நூற்றாண்டு முன்னேறிவிட்டோம். தமிழ் வளரும் தஞ்சையிலே மற்றொரு மன்னர் மன்றம் தோன்றுகிறது. மணியாசனத்தில் வீற்றிருப்பவர் அச்சுதப்பநாயக்கர் (1572-1619) பக்கத்திலிருக்கும் மந்திரியார் கோவிந்த தீக்ஷிதர். ஏட்டுச்சுவடியோடு காணப்படுபவர் அவர் மகன் வேங்கடமகி. சுவடி "சதுர்த்தண்டிப் பிரகாசிகை". பாணரொருவர் வீணையிலே மேளகர்த்தா இராகங்களை ஒவ்வொன்றாகக் காட்டுகிறார். மன்னர் மன்றத்திலே பல இசை அறிஞர் முன்னிலையிலே வேங்கடமகி நூலரங்கேற்றுகிறார்.

ஒரு நூற்றாண்டு முன்னேறிவிட்டோம். இவர் இராமமாத்தியர். இவர் கையில் இருக்கும் நூல் "சங்கீதசுவர மேள கலாநிதி". பழந்தமிழ்ப் பண் ஒருசிலவற்றைக் குறிப்பிடுகிறார்.

மேலும் இருநூறாண்டு முன்னேறிவிட்டோம். டௌலத்தாபாத் தேவகிரி சிம்மண ராஜனது சபை தோற்றுகிறது. அங்கிருக்கும் பெரியார் சாரங்கதேவர் (1210-1247) அவர் கையிலிருக்கும் நூல் "சங்கீத ரத்னாகரம்". தமிழ்நாட்டுப் பண்முறையை ஓரளவிற்கு ஆராய்ந்து கற்றவர்-சில இராகங்களை, இவை தேவாரத்திற் கூறப்பட்டன எனக் குறிப்பிடுகிறார்.

முன்னேறிச் சென்று திருமுறைகண்ட சோழமன்னனது சபைக்கு வந்துவிட்டோம். செல்லரித்த ஏடுகளிலிருந்து ஏழு திருமுறையையும் மன்னன் எழுதுவித்துக்கொண்டான். பண்வகுக்க இசை வல்லாரைக் காணாமையினாலே கவல்கின்றான். ஒரு பெரியார் முன் வந்து அரசனைத்தேற்றி, "மன்னர்மன்ன! திருநீலகண்டர் யாழ்ப்பாணர் மரபிலே உதித்த பெண்ணொருத்தி தேவாரப் பண்களை அறிந்திருக்கிறாள்," என்றார். "ஆ! கலைத் தெய்வமே! உன்கருணையே கருணை. இயல்வல்லாரும் முடிமன்னரும் உன்னை மறந்திருக்க, ஓர் ஏழைப் பெண்ணின் உள்ளத்தில் நுழைந்து எம்பிரான் சம்பந்தன் அளித்த இசை யமிழ்தத்தினைப் பாதுகாத்து வைத்தனையே," என்று நினைந்து நாம் உள்ளம் உருகுகிறோம்.

முன்னேறிச் செல்கிறோம். கர்லாட நூலாசிரியர் தோற்றுகிறார். இவரைச் சூழப் பலவேறு இசைக் கருவிகளை ஏந்திய பாணர்கள் நிற்கிறார்கள். நிலத்திலே பட்டுத் துணியின்மீது கிடத்தியிருக்கும் பெரிய கருவி நாரத வீணை. ஆயிரம் நரம்புடையது. ஒன்பது நரம்புடையதாய்ப் பாணன் கையிலிருக்குங் கருவி தும்புரு வீணை. ஒரு சில பாணர்கள் தாங்கி நிற்கும் நூறு நரம்புகளையுடைய கருவி கீசக வீணை, மற்றொரு பாணன் கையிலிருக்கும் ஒற்றை நரம்புக்கருவி மருத்துவ வீணை.

காவிரிக்கரை தோற்றுகிறது. திருவரங்கத்தம்மானது சந்நிதியை நோக்கிய வண்ணமாகத் திருப்பாணாழ்வார் யாழேந்தி நிற்கக் காண்கின்றோம்.

திருவாலவாயுடையார் கொடுத்த திருமுகப் பாசுரத்தோடு சேரமான் பெருமான் நாயனாரை நோக்கிச் செல்லும் பாணபத்திரரைக் காண்கின்றோம்.

முன்னேறிச் செல்லுகின்றோம். முத்தமிழ் விரகராகிய திருஞானசம்பந்தப்பிள்ளையாரும், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரும், விறலியாராகிய மதங்க சூளாமணியாரும், திருநீலநக்கநாயனார் வீட்டிலே தங்கியிருக்கும் தெய்வக் காட்சியினிடையே, சகோட யாழினைக் காண்கின்றோம்.

ஆளுடைய பிள்ளையாராகிய இளஞாயிறு தோற்றித், தமிழ்வழங்கு நாட்டிலே, ஒளிபரப்புவதற்கு முன்னுள்ள காலத்தையடைகிறோம் எங்கும் இருள். இருளினூடே, நாலுநாவலருடம் முன்னேறிச் சென்றுவிட்டோம். மீண்டும் பேரொளி. காவிரிப்பூம்பட்டணம். பெருமாணிருக்கையிலே இயல்பாக உள்ள இசையொலி இன்று அடங்கியிருக்கின்றது. எல்லோரும் சோழமன்னனது சபைக்குப் போய்விட்டார்கள். சபைக்கு அணித்தாக நாடக

தொடர்ச்சி 4-ம் பக்கம்

---

* பாரசீகம் எனப்படும் ஈரான் நாட்டிலிருந்து வந்தமையினாலே இப் பூ இப்பெயர் பெற்றது.

சிங்கப்பூர் வீழ்ச்சியடையமாட்டாது

சட்டசபை அவசரக்கூட்டத்தில் கவர்னர் பேச்சு

மலாயாவில் ஜப்பானிய கரன்ஸிநோட்டுகள்!

சிங்கப்பூர், டிச 17

பினாங்கின் தலைவிதி அநேகமாகக் கெடாவில் என்ன சம்பவிக்கின்றதோ அதைப் பொறுத்ததாக இருக்கும் என்று கவர்னர் ஸேர் ஷென்டன் தோமஸ் நேற்றுப்பின்னேரம் சட்டசபையின் அவசரக் கூட்டத்தில் தெரிவித்தார். அவர் மேலுங் கூறியதாவது:-

ஆரம்பத்தில் நடைபெற்ற திடீர்த் தாக்குதல்கள் எமக்குக் கஷ்டத்தையுண்டுபண்ணிவிட்டன. நாம் நினைத்தது போல் அவை நடைபெறவில்லை. ஆதலால், நாம் ஓரளவுக்கு அதிர்ச்சியுற்றோம். இன்னும் அதிகமாக நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால், சிங்கப்பூர் வீழ்ச்சியடையக்கூடாது; அது வீழ்ச்சியடையமாட்டாது.

நாம் கடைசிவரைவிட்டுக்கொடுக்கமாட்டோம். எகிப்திலிருந்து அண்டார்ட்டிக் வரை பிரித்தானிய ஏகாதிபத்தியம் எமது ஆதரவை எதிர்பார்க்கிறது. பிரித்தானிய ஏகாதிபத்தியம் மாத்திரமல்ல, சுதந்திரத்தையும் நியாயத்தையும் உண்மையையும் விரும்பும் அனைவரும் எமது ஆதரவை எதிர்பார்க்கின்றனர்.

ஆதலால், நாம் எவ்வித கஷ்டங்களையும் சகித்துக் கொள்வதற்கு எம்மைத் தயாராக்கிக்கொண்டு போராடவேண்டும். இறுதிவெற்றி எமக்கே உரியது.

எனது சொந்தச் சாதியினருக்கு நான் இதைக் கூறுகிறேன். பொது சனங்களை வெளியேற்றுவதிலாவது வேறிடத்திற்கு மாற்றுவதிலாவது சாதிவித்தியாசம் பாராட்டப்படமாட்டாது. ஆணாயிருந்தாலுஞ் சரி, பெண்ணாயிருந்தாலுஞ் சரி ஐரோப்பியர் எவரையும் சிவில் அரசாங்கம் வெளியேற உத்தரவிடமாட்டாது. இந்நாட்டு மக்களின் வாழ்விலும் தாழ்விலும் நாம் அவர்களுடனேயே இருப்போம்."

மலாயாவில் ஜப்பானியரின் நோட்டுகள்

மலாயாவில் படையெடுக்கும் ஜப்பானியத் துருப்புகளிடம் மலாயாவில் உபயோகிப்பதற்கென்றே ஜப்பானில் அச்சடிக்கப்பட்ட நாணய நோட்டுகள் கொடுக்கப்பட்டிருப்பதாக இங்கு அறியப்படுகிறது.

50 காசு, ஒரு டொலர், ஐந்து டொலர், பத்துடொலர் மதிப்புள்ள நோட்டுகள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸ் எச்சரிக்கை யொன்று கூறுகின்றது. ஒவ்வொரு நோட்டிலும் அந்த நோட்டிற் குறிப்பிடப்பட்டிருக்கும் தொகையை அதைவைத்திருப்பவருக்கு ஜப்பானிய அரசாங்கம் கொடுக்க வாக்குறுதியளித்திருக்கிறது என்ற வார்த்தைகள் காணப்படுகின்றன!

ஜப்பானியரின் வாக்குறுதிபெறுமதியற்றதென்றும் பொதுஜனங்கள் அந்த நோட்டுக்களை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்றும் பொலிஸார் எச்சரிக்கை செய்திருக்கின்றனர். அத்தகைய நோட்டுக்களை வைத்திருப்போர் துரோகிகளாகக் கருதப்படுவர்.

யுத்தமும் இலங்கை நிலையும்

அரசாங்கசபையில் தேசாதிபதியின் சொற்பொழிவு

விமானத் தாக்குதற் பாதுகாப்பு

கொழும்பு, டிச 18

நேற்றுப் பிற்பகல் 2-30 மணிக்கு அரசாங்கசபையின் விசேஷகூட்டம் நடந்தது. மந்திரிகளும் அங்கத்தவர்கள் அனைவரும் விஜயஞ்செய்திருந்தனர். 'விசிட்டர்கள் காலரி'களில் ஜனக்கூட்டம் நிரம்பியிருந்தது. சபைத்தலைவர் ஸேர். துரைசாமி தலைமை வகித்தார். கவர்னர் அரசாங்கசபைக்கு விஜயஞ் செய்தார்.

ஜப்பான் யுத்தத்தில் இறங்கிய பின், இலங்கையிலுள்ள இப்போதைய நிலைமைபற்றி மேன்மை தங்கியதேசாதிபதிநீண்டதோர் அறிக்கை விடுத்தார். அவர் தமது பேச்சின் இறுதியில் தமது விரல்களால் 'வி' குறிகாண்பித்துச் சபைத்தலைவரின் வலப்புறத்தில் அமர்ந்தார். தேசாதிபதியின்பேச்சு ஒலிபரப்பப்பட்டது.

கவர்னர் பேச்சு

தேசாதிபதிபேசியதாவது:-முன் ஒரு தடவை நான் உங்கள் முன்னிலையிற் பேசினேன். ஜெர்மனி மீது நாம் யுத்தப்பிரகடனம் செய்த இரண்டு நாட்களுக்குப் பின்புதான் நான் பேசினேன். யுத்தப் பிரதேசத்திற்குட்படாமல்; தொடர்ந்து நாம் நிம்மதியாக இருந்து வரவேண்டுமென்று அன்று பிரார்த்தித்தேன். அதேபோன்று நான் இன்னும்பிரார்த்திக்கிறேன். ஆனால், தூரக்கிழக்குப் பிரதேசத்தில் ஜப்பான் [illegible] அமெரிக்காவையும் நம்மையும் தாக்கி இருப்பதாலும் ஜப்பானுக்குச் சில ஆரம்பவெற்றிகளேற்பட்டிருப்பதாலும் நாம் எத் தீமை நெருக்கடிக்கும் நம்மைத் தயார் செய்துகொள்ளவேண்டியது இன்றியமையாததாகி விட்டது. நமது யுத்தநிதிக்காகவும் யுத்தக் கடன் நிதிக்காகவும் போதியபணம் திரட்டப்பட்டிருக்கிறது. இதனால் நமது யுத்த லக்ஷியம் நன்கு உணரப்பட்டிருக்கின்றதென்பது வெளிப்படை. இப்பொழுது ஜப்பான் அநிக்ரமமாக நம்மைத் தாக்கியிருக்கிறது. இவ்விஷயத்தில் பொதுமக்கள் கொண்டுள்ள மனோபாவம், கொழும்பு டாக்கி வாசிகளில் நன்கு பிரதிபலிக்குமென்று எதிர்பார்க்கிறேன்.

பாதுகாப்புப் பிரச்னை

தற்பொழுது அசாதாரணமான நிலையேற்பட்டிருக்கிறது. இதனால் நமது பாதுகாப்புவிஷயம் யுத்த சேவை ஆகியவைகளை அவசரமாகவும் திறம்படவும் கவனிக்க வேண்டிய அவசியமேற்பட்டிருக்கிறது. காலதாமதத்தால் பேராபத்து ஏற்படக் கூடும். சாதாரண காலத்தில் பொதுவான செலவுகளுக்காக உபமான்யம் கோரிச் செய்யப்படும் தீர்மானம் மந்திரிசபையின் சம்மதத்தைப் பெற்று அரசாங்கசபையில் விஸ்தாரமாக விவாதிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட நிர்வாகக் கமிட்டிகளுக்கும் முழுத் தகவல்களும் கொடுக்கப்படுகின்றன. ஆனால் பாதுகாப்பு யுத்தச் சேவை போன்றவைகளுக்குக் கோரப்படும் உபமான்யங்கள் பற்றிப் பகிரங்கமாக விவாதிக்கப்படுவதில்லை. பாதுகாப்பில், நமக்குள்ள குறைகள் சத்துருவுக்கு எட்டக்கூடுமென்பதால் அவ்விவாதம் தவிர்க்கப்படுகிறது. கூடுமானவரை பாதுகாப்பு விஷயங்கள் இரகசியமாகவே வைத்துக்கொள்ளப்படுகின்றன. இன்று அவசரப் பாதுகாப்புச் செலவுக்காக 2 கோடி ரூபாய் மான்யத்தை அனுமதிக்கக் கோரும் பிரேரணை நிகழ்ச்சிக் குறிப்பிலிருக்கிறது. இவ்விஷயத்தில் நான் மேலே கூறிய முறையை அனுஷ்டிக்கவேண்டும். இவ்வாறு செய்வது அரசியல் அமைப்புக்கு முரண்பட்டதல்ல. இத் தொகையைச் செலவுசெய்யும் விஷயத்தில் மந்திரிசபையினர் கலந்துகொள்ளப்படுவார்கள். ஸ்தல பாதுகாப்புக் கமிட்டியின் ஆலோசனையும் அவர்களுக்குக் கிடைக்கும்.

பாதுகாப்புக் கமிட்டி

ஸ்தலப் பாதுகாப்புக் கமிட்டி எனது தலைமையின்கீழ்க் கூடும். இக்கமிட்டிக்கு உள்நாட்டு மந்திரி, விவசாயமந்திரி, ஸ்தலஸ்தாபன மந்திரி, போக்குவரத்துமந்திரி ஆகியவர்களுட்பட அங்கத்தவர்கள் நியமிக்கப்படுவார்கள். இவர்கள் இத்தீவிற்கு யுத்தம்பற்றி ஆலோசனை கூறுபவர்களாக இருப்பார்கள். இந்நாட்டின் பல வகுப்பினரும் இவர்களுடன் ஒத்துழைக்க இயற்கையாகக் கொண்டுள்ள விருப்பத்தைநான் பாராட்டுவதுடன் அவர்களை வரவேற்கவும் செய்கிறேன். எனவே, ஸ்தல பாதுகாப்புக் கமிட்டிக்குச் சிறுபான்மை வகுப்பு அங்கத்தவர்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

கொக்குவில் ஸ்ரீராமகிருஷ்ண சைவவித்தியாசாலைப் பரிசளிப்பு விழா

நிகழும் விஷு வருஷம் மார்கழித் திங்கள் முதலாம் நாள் (15-12-41) திங்கட்கிழமை ௸ வித்தியாசாலையில், பரிசளிப்பு விழா உதவி வித்தியாகர்த்தர் லெப்டினன்ட் கேணல் R. பற்றிக் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்று மாலை 5.15 மணிக்குத் தலைவர் அவர்களுக்கு முகாமையாளர் ஸ்ரீமத். சுவாமி நிஷ்காமானந்தர் அவர்கள் மாலையிட்டனர், பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும், வடபகுதி வித்தியாதரிசிகளும், தலைவர் அவர்களுடன் சுவாமிஜீயும் உட்பட ஒரு புகைப்படம் பிடிக்கப்பட்டதும், வித்தியாலய மண்டபத்தில் தேவார பாராயணத்துடன் விழா ஆரம்பமாயது. மாணவர்களின் வரவேற்புப் பாவும் சுவாமிஜீயின் வரவேற்புரையும் நிகழ்ந்தன. பின், தலைவர் அவர்களாற் பாடசாலை வளவில் ஞாபகார்த்தமாக ஒரு மாங்கன்று நாட்டப்பட்டதுடன் மாணவர்களால் அபிநயப்பாட்டு, யோகாசனங்கள், ஆங்கிலப் பாட்டு, கோலாட்டம், தமிழ்ப்பேச்சு, தேகப்பயிற்சி, அப்பர் சரிதையிற் சிலகாட்சிகள் நிகழ்ந்தன. பின் ௸ பாடசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீமான் இ. கந்தையா அவர்களாற் பாடசாலை யறிக்கை வாசிக்கப்பட்டது. வடபெரும்பாக வித்தியாதரிசி ஸ்ரீமான் A. J. R. வேதவனம் அவர்கள் விழா வைபவத்தைப் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர், அவர் கூறியவற்றுள், 'மாணவர்களின் பேச்சுத் தெளிவு மிக மெச்சத் தக்கது' என்பதும், ஆங்கிலப் பாட்டுத் திறமையுடன் படிக்கப்பட்டதென்பதும், 'பாடசாலை வளர்ச்சிக்குக் கிராமத்தார் மேன்மேலும் ஒத்துழைக்க வேண்டும்' என்பதும் குறிப்பிடத்தக்கன. தலைவர் அவர்களால் இராமகிருஷ்ண சங்க அபிமானிகள் பலர் உபகரித்த புத்தகப் பரிசுகள், கதருடைப்பரிசுகள் 1 வகுப்பு முதன்மை 2 கட்டுரை வன்மை (விவேகானந்தர், இராமகிருஷ்ணர்) 3 தேவாரமுதன்மை 4 சங்கீதத் திறமை 5 நடிப்பு வன்மை 6 சுகாதார முதன்மை 7 வரவொழுங்கு முதன்மை 8 தேகப்பயிற்சித் திறமை 9 தையல்வேலை முதன்மை 10 ஹரிசன மாணவர் விவேக முதன்மை என்பவற்றிக்காக வழங்கப்பட்டன. தலைவர் அவர்கள் தாம் யாழ்ப்பாணத்திற் பரிசளிப்பு விழாவிற்குத் தலைமை வகிப்பதுஇதுவே முதன்முறை யெனவும், பரிசுபெற்ற மாணவர்களைப் போல ஏனைய மாணவர்களும் பரிசுபெற முயற்சிக்க வேண்டுமெனவும், தம்மால் நாட்டப்பட்ட ஞாபக விருட்சம் போல் நாட்டு வாழ்க்கைக் கல்வியும் விரைவிற் பயனளிக்குமெனத் தாமெண்ணுவதாயும் கூறி முடித்தனர். பின்னர் ஸ்ரீமத். சுவாமிஜீ அவர்கள் நன்றி கூறியதும் தேவார பாராயணத்துடனும் அரச வாழ்த்துடனும் மாலை 7.10 மணிக்குப் பரிசளிப்பு விழா இனிது நிறைவெய்தியது. கடித.

மகளிர் ஒழுக்கம்

சிவஸ்ரீ வை. ஆத்மநாதசர்மா ஆசிரியர், நாவலர்கலாசாலை வண்ணை

ஒருநாடு சிறப்படைய வேண்டுமானால் அந்நாட்டிலுள்ள மக்கள் சீர்திருத்தம் பெற வேண்டும். சீர்திருத்தம் பெறுதலாவது கற்கவேண்டியவற்றைக் கற்றும், கற்றதை அறிந்தும், அறிந்தபடி ஒழுகியும்; பழகவேண்டியவற்றைப் பழகியும், பழகிய நற்செயல்களைச் சோம்புதலின்றி, விடாது முயன்று பொருளீட்டிச் செல்வத்தைப் பெருக்கியும், அவ்வாறு நிலையற்ற வழியில் ஈட்டிய செல்வத்தைப் பிறருக்கும் தமக்கும் பயன்படுத்தியும் சிறப்புற வாழுதலாகும். இவ்வாறான சீர்திருத்திய சிறந்த வாழ்வுக்கு மூலகாரணர்கள் மகளிர்களேயாவர். ஆதலால்-மகளிர்களின் ஒழுக்கம் எவ்வாறமைதல் வேண்டுமென ஆராய்வதும், அதனை மேலோங்கச் செய்வதும் மக்கள் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாக் கடமையாகும்.

ஆடவர் மகளிர் என இருபாலரைக் கொண்டுள்ளது இவ்வுலகம். அவ்விருபகுதியாரின் ஒத்துழைப்பே இவ்வுலக வாழ்வாம். அதனைச் சூசிப்பிக்கவே எம்பெருமானார் அர்த்தநாரீசுரத் திருக்கோலங் கொண்டருளினர். அஃதாவது சிவபெருமானது திருக்கோலங்களுள் ஒன்றில் ஒருபாதி உமைவடிவமும் மறுபாதி சிவவடிவமும் பொருந்தியிருப்பதாகும். அதன்பொருள், சக்தியின்றிச் சிவம் இயங்காதெனபதும், சிவத்தோடு சேர்ந்தவழியன்றிச் சிவசக்திக்கு வியாபகம் இல்லையென்பதுமாகும். பிரகாசிக்கும் தன்மை அக்கினிக்கு இயல்பாகவே உண்டெனினும் எரியத் தகுந்த ஒரு பொருளோடு சேர்ந்தவழியன்றி அது தோற்றாதிருத்தல் போல, சிவபெருமானுக்குரிய பிறிதொரு திருக்கோலம் உமாமகேசுர வடிவமாம். உமையம்மையாரை வாமபாகத்திற் கொண்டுள்ள தோற்றம். இதுவும் உலகத்தவரைப் போகமநுபவிப்பித்தற்பொருட்டென்பர். இதனையொட்டியே,

"பாகமதி லுத்தமியை வைத்தல்
பழுதென்றாய்,
புத்தனுக்கு விடையாக
"போகமுல குக்கருள் புரிந்தருள
வென்றே
மாகமுகிலொத்தகுழல் மங்கையொ
டிருந்தான்

என மாணிக்கவாசகசுவாமிகள் விடையிறுத்தருளினரென்று புராணங் கூறும்.

மகளிருக்கு வாழ்க்கைத்துணை யென்னுங் காரணப் பெயர் உண்டு. வாழ்வு சிறப்படையத் துணை புரிபவர் என்பதுவே அதன்பொருள். பூவுலக வாழ்வு சிற்றின்பங்களை மாத்திரம் அநுபவிப்பதை இலக்காகக் கொண்டதல்ல. சிற்றின்பங்கள் நிலையற்றன. அதனையறிந்து சிற்றின்பங்களை நுகரும் வாயிலாக நிலையான பேரின்பத்தை அடைவதற்குரிய சாதனங்களைத் தேடிக்கொள்ளுவர் அறிவுடையோர். அதுபோலவெனின், ஐம்புலன்களுள் சுவையுணர்வுடையது நாவாகும். சுவைப்பதற்காக மாத்திரம் நாம் உண்பதில்லை. சுவைப்பொருள்களைத் தேடி நுகரும்போதே நமது சரீரத்தை வளர்க்கத்தகுந்தவற்றையும், வளர்க்க உடம்பை உறுதிப்படுத்தும் உணவுகளையும் உண்ணுவது போலாகும் "பேரின்பமென ஒன்று இருப்பதை யார்கண்டார், சிற்றின்பமே பேறுபவமென்று" கூறி அதிலேயே நினைப்பவர்கள், நாசுவைத்த அளவில் மேலும் உட்கொள்ளாமல், உணவை உமிழ்ந்து விடுவார்களா? இல்லையே. அவ்வாறே, அற்ப சுகந்தரும் சிற்றின்ப நுகர்ச்சியளவிலே நிலைத்து, அதற்காகவே அமைந்தவர் மகளிர் எனப் புத்தி மாழாமல், நித்திய சுகமாகிய பேரின்பப் பெருவாழ்வை ஆடவர் அடைவதற்குத் துணையாக நிற்கும் பெண்பாலினரே மகளிராவர் என்பது அமையும். அதனாலேயே 'இல்லற மல்லது நல்லற மன்று' என்றார் நீதிநூலாரும். மகளிரிடத்துக் கொள்ளும் அன்பின் வழியாக அறத்தைச் செய்வதே இல்வாழ்க்கையின் பண்பும் பயனுமாகும். இல்லறத்தோடு கூடிவாழும் முறையை அறிந்து வாழ்பவன் தெய்வமாக மதிக்கப்படத்தக்கவன். இக்கருத்தையே திருவள்ளுவப் பெருந்தகையாரும்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்
பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்."

எனக் கூறியருளினர்.

'மகளிர்' என்ற அளவிலே சிலர் வெறுத்து ஒதுங்குவர், ஒரு சிலர் அஞ்சி அடங்குவர், இன்னுஞ் சிலர் இரங்கி உருகுவர், வேறு சிலர் தம்மை ஒறுத்தும் உதவ முற்படுவர் எஞ்சிய சிலர் கண்டு களிக்க முயலுவர். என்னை? ஒவ்வொரு சாராரும் தனித்தனியான காரணங்களால் அவ்வாறு செய்யினும், இரட்டி நோக்குமிடத்து பெண்மை இயல்பு (மெல்லியல்) ஒன்றே மூலமாதலாலென்க.

ஆடவரைப் புண்ணியத்தின் உருவமென்றும், பெண்பாலாரைப் பாபத்தின் உருவமென்றும் சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேம். அதனை எம்மனம் ஒப்பவில்லை. என்? புண்ணியத்தின் வடிவம் பாவவடிவத்தை இருப்பிடமாகக் கொண்டு பிறக்குமா? பாவம் புண்ணியத்துக்கு உதவி புரியுமா? இல்லையாதன்றே.

மகளிர், பெட்புடைமையாலேயே பெண்ணெனப்பட்டார், விரும்பப்படுந்தன்மையே பெண்மை. பிறரால் விரும்பப்படும் பொருள்களைப் பேணிக்கொள்ளுவது மனிதஇயல்பு. எனவே பெண்மையை யுடையவர்களான மகளிர் எப்போதும் பேணிக் கொள்ளப்பட வேண்டியவர்.

மகளிர் மங்கைப் பருவம் எய்தும் வரையும் பெற்றோராலும், பின் தமது நாயகனாலும், அவனது காலத்துக்குப் பின்னும் இருக்க நேர்ந்தால் தமது பிள்ளைகளாலும், பிள்ளைகளில்லாவிடின் நெருங்கிய சுற்றத்தவராலும் பாதுகாக்கப்படவேண்டியவர்கள். இதனையே மநு என்னும் நீதிநூலாசிரியர்,

'பிதாரக்ஷதி கௌமாரே பர்த்தா
ரக்ஷதி யௌவனே!
புத்ராஸ்து ஸ்தாவிரேபாவே நஸ்த்ரீ
ஸ்வாதந்த்ரிய மர்ஹதி!!

என்று கூறியிருக்கிறார். மேலும் இதனை அநுவதித்து யாஜ்ஞவல்கியர், நாரதர் முதலான மகான்களும் வற்புறுத்திக் கூறுவாராயினர். மேற்கூறிய சுலோகத்தில் நஸ்த்ரீஸ்வாதந்த்ரிய மர்ஹதி, என்ற தொடரின் நேர்பொருள் யாதெனில், பெண்கள் சுதந்திரமாக வாழ அருகதையற்றவர்கள் என்பது. இதன் உண்மைப்பொருளை உணராத பிறமதத்த சிலர், பெண்மக்களை அடக்கி ஒடுக்க வேண்டுமென்றார்கள்; அவர்களுக்கு உலகவிவகாரமே தெரிய வேண்டுவதில்லை யென்றார்கள்; அவ்வாறே வீட்டினுள் இருத்தி அறியாமை என்னும் இருட்டில் திகைக்கவிட்டார்கள். இதனைக்கண்டு மனம் சகியாத பாரதியார் போன்ற அறிவாளிகள் பெண்களுக்கு விடுதலை வேண்டும்; அவர்கள் நன்கு கற்பிக்கப்படவேண்டும், ஆடவர்களுக்குச் சிறந்த வாழ்க்கைத்துணையாக்கப்படவேண்டும் என்றெல்லாம் போதிப்பாராயினர். இவற்றை யறிந்த சில கவிஞர்கள், அப்பெரியார் கூறியவற்றின் உண்மையை உணராமல், இக்காலத்தில பெண்களுக்குச் சம உரிமைவேண்டும், ஏனெனில் அவர்கள் ஆடவர்களுக்கு எவ்வாற்றாலுங் குறைந்தவர்களல்லர், அதனால் அவர்கள் ஆண்மக்களாற் கட்டுப்படுத்தப்பட வேண்டியவர்களுமன்று என்றெல்லாம் பிதற்றத் தலைப்பட்டார்கள்.

பழங்காலப் பெரியோர் கூறிய நீதிநூல்களும் பிழைபடவில்லை. பிற

தொடர்ச்சி 4-ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு௵
மார்கழிமீ அ௨ திங்கட்கிழமை

கிழக்குப் பகுதி யுத்தநிலை

ஹொங்ஹொங் சிங்கப்பூர் பினுங்கு முதலிய கிழக்கு நாடுகளிலிருந்து இப்பொழுது கிடைக்கும் தந்திச் சமாசாரங்கள் இங்குள்ளார்க்கு மன ஆறுதலை விளைவிப்பனவாகத் தோன்றவில்லை யெனலாம். ஜப்பானியர் தாங்கள் ஹொங்ஹொங் நாட்டைக் கைப்பற்றி விட்டதாகச் சாதிக்கின்றனர். ஜப்பானியர் ஹொங்ஹொங்கில் 12மணி நேரம் இடைவிடாது வெடிகுண்டுகளிட்டும் குண்டுப் பிரயோகஞ் செய்தும் சேதம் விளைத்தார்களாம். விமன் பாதைக் கெதிரேயுள்ள பாதுகாப்புக்குரிய தானங்கள் பகைவரால் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டனவெனத் தெரிவிக்கப்படுகின்றது. நயிக்கோவுக் கணித்தாகவுள்ள எண்ணெய்த் தாங்கி நெருப்புப்பற்றி யெரியக் காணப் படுகின்றதாம். சிங்கப்பூரிலிருக்கும் பிருத்தானிய பிரதிநிதியாகிய டவ்கூப்பர் தங்கள் சைநியம் மலாயாவின் வடமேற்றிசையை நோக்கிப் பின்னிடவேண்டி ஏற்பட்டதென்றும் இப்படிச் செய்வதனாற் பினங்கைப் பகைவரிடமிருந்து காப்பதற்குப் போதிய சைநியமில்லையென்றும் போதிய சைநியம் விரைவில் தருவிக்கப்படல் வேண்டுமென்றும், தாங்கள் இந்த ஆபத்தான நேரத்திற் செய்யவேண்டிய கடமையிலே நிறம்பவொண்ணாதென்றும் இதுவரையில் ஜப்பானியரே அநுகூலமடைந்து வருகின்றார்களென்பதை நாங்கள் வெளிப்படையாக ஒத்துக்கொள்ள வேண்டுமென்றும் தெரிவிக்கின்றார். ஹொங்ஹொங்கை யப்பானியர் தாங்கள் கைப்பற்றி விட்டதாகக் கூறினும் இன்னும் அங்கே யுத்தம் நடைபெறுகிறதென்பதும் பிருத்தானியர் முற்றாகக் கைவிடவில்லையென்பதும் பிந்தி வந்த சமாச்சாரங்களைக் கொண்டு அறியக்கிடக்கின்றன.

சிங்கப்பூர்விஷயமாக ஆராயுமிடத்து, பிருத்தானியருக்கும் அமெரிக்கருக்குமுரிய பெரிய யுத்தக் கப்பல்களைச் சிங்கப்பூர்க் கடலிற் கொண்டுவந்து சேர்த்துவிடலாமோ என்ற விஷயம் ஆலோசிக்கப்படுகின்றதென அறியக்கிடக்கின்றது. பெரிய யுத்தக் கப்பலை அங்கே கொண்டுவந்து சேர்க்கும் விஷயத்தில் முதல் அக்கப்பல்களுடைய பாதுகாப்பையிட்டு யோசிக்க வேண்டுமாம். இதற்கு முதற் செய்யவேண்டியது போதிய பட்டாளங்களையும் படைக்கலங்களையும் அங்கே வரச் செய்வதாம். அப்படி இல்லாதபட்சத்திற் பாரிய யுத்தக் கப்பல்களை அங்குக் கொண்டு வருவது புத்தியாகாதென "மான்செஸ்டர்கார்டியன்" என்னும் பத்திரிகை முறையிடுகின்றதாம். மேலும் டிசெம்பர் 23-ந் தேதி தொடக்கம் யுத்த காலப் பிரமாணத்தை அநுசரித்துச் சிங்கப்பூரில்வசிக்கும் பிருத்தானிய பிரசைகளுள்ளும் ஏனைய சாதியாருள்ளும் ஆண்களாகவுள்ளவர்கள் மாத்திரம் உண்ணாட்டுப் பாதுகாப்பாகிய தொண்டைச் செய்வதற்குத் தங்கள்பெயரைப்பதிவு செய்துகொள்ள வேண்டுமாம். சிங்கப்பூர்ப் பகுதியில் மிஸ்றர் டவ்கூப்பரைத் தலைவராகக் கொண்ட யுத்த நிர்வாகசபையொன்று துரிதமாக நிர்வகிக்கப்படுமென அறியப்படுகின்றது.

பிலிப்பைனின் தீவுகளில் அமெரிக்க சைநியத்திற்கும் யப்பானியருக்கு மிடையே கோரமான யுத்தம் நடக்கின்றது. டாவையோ என்னுமிடத்தில் யப்பானியசைநியம் அதிகமாக வந்து இறங்கிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்தீவில் வசிப்போருள் யப்பானிய குடிசனத்தவரே கூடிய தொகையினராம். பிலிப்பைனைச் சேர்ந்த மிண்டானோத் தீவிலும் யப்பானிய சைநியஞ் சென்றிறங்கிவிட்டதாம். இப்படியெல்லாமிருப்பினும் பிந்தி வந்த சமாசாரங்கள் மனத்திற்குச் சிறிது ஆறுதலைத்தருவனவாகக் காணப் படுகின்றன. ஹொங்கொங்குக் கணித்தான கடலில் யப்பானியருக்குரிய 3 முறுயிஸர்க் கப்பல்கள் இயங்க முடியாத நிலையிற் சேதப்படுத்தப்பட்டனவாம். ஹொங்கொங்கில் மோசமான யுத்தம் நடைபெறுகின்றதென அங்குள்ள தேசாதிபதி தெரிவிக்கின்றார். பிருத்தானியபடையும் அங்குள்ள பிரசைகளிற் பிரியமானவர்களும் பினங்கை விட்டு ஆறுதலாகவும் பதனமாகவும் அகற்றப்பட்டனரெனக் கூறப்படுகிறது. அத்தானத்தைவிட்டுப் போகும்போது பிருத்தானியர் சும்மா போகவில்லையாம். யுத்த முனையில் தாம் விடும் யுத்த உபகரணங்களையெல்லாம் பகைவருக்குப் பயன்படா வண்ணஞ் சிதைத்துவிட்டே அகன்றனராம். மலாய யுத்தமுனையில் விசேஷமானசம்பவம் இப்பொழுது யாதுமில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

*

திருவெம்பாவை

"ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம் பாடக்கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன் செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னே யென்னே
ஈதே யெந்தோழி பரிசே லோரெம் பாவாய்"

மானுடர்களாகிய எங்களுக்கு ஒரு வருடமாகவுள்ளகாலம் தேவர்களுக்கு இராப்பகலோடு கூடிய ஒரு நாளாகும். இதனுள் உத்தராயணமாகிய தைமாசத் தொடக்கம் ஆனி யிறுதியாகவுள்ள ஆறுமாசங்களும் தேவர்களுக்குப் பகற்காலமென்றும், தெட்சணாயனகாலமாகிய ஆடி தொடக்கம் மார்கழி யிறுதியாகவுள்ள ஆறுமாசங்களும் தேவர்களுக்கு இராக்காலமென்றுஞ் சொல்லப்படும். இந்த ஆறு மாசங்களுள் இறுதியில் நின்ற மார்கழிமாசம் தேவர்கட்குப் புலரிக்காலமாம். இந்தப் புலரிக் காலத்திலே ஸ்நானம் சந்தியா வந்தனம் பூசைவழிபாடு என்னுமிவைகளைச் செய்தல் தேவர்கட்குப் பிரியமாகும். இக்காரணம் பற்றியே மார்கழிமாசம் முழுவதும் புலரிக்காலத்தில் ஸ்நான சந்தியாவந்தனம் ஆலயவழிபாடு என்னுமிவைகள் சைவ நன்மக்களாற் பயபக்தியோடு செய்யப்பட்டு வருகின்றன. மார்கழிமாசம் முழுவதும் சிவாலயங்களில் வைகறையில் ஒரு காலப் பூசை மேலதிகமாக நடைபெற்று வருகின்றது. இங்குள்ள ஓதுவார்கள் இந்த மாசம் முழுவதும் சங்காதஞ் செய்து கொண்டும் சேமக்கலம் அடித்துக் கொண்டும் பிற்சாமத் தொடக்கம் விடியும் வரை நகர் வீதிகள் தோறும் திருவெம்பாவை ஓதித்திரிவர். மாதர்களாயுள்ளார் விடிய ஐந்து நாழிகைக்குமுன் நித்திரைவிட்டெழுந்து காலைக்கடன் முடித்துத் தம்மில்லங்களைச் சுத்தி செய்து முன்றிலை மெழுகிக் கோலமிட்டுச் சாணத்தால் மார்கழிப்பிள்ளையார் பிடித்து வைத்து அறுகம் புல்லினாலும் பூசினாலும் அப்பிள்ளையாரை அலங்கரித்து வழிபடுவர். இந்தச் சற்கருமத்தை இங்குள்ள மாதர்கள் நவீன நாகரிகத்தின்பாற்பட்டு அலட்சியஞ் செய்யாது மார்கழிமாதந் தோறுஞ் செய்து வருவார்களாக.

இனி, மார்கழிமாதத் திருவாதிரை நாளுக்கு முந்திய ஒன்பது நாள்தொடக்கம் திருவாதிரை முடியவுள்ள பத்துநாளும் ஆலயங்களிற் புலரிக்காலப் பூசைமுடிவில் திருவாசகத்திலுள்ள திருவெம்பாவை தேவாலயங்களிலும் மடாலயங்களிலும் ஓதப்படுகின்றது. எங்கள் சைவசமய குரவருள் ஒருவராகிய மாணிக்கவாசக சுவாமிகள், தியானிக்க முத்திதருவதாகிய திருவண்ணாமலைக்குச் சென்று அருணாசலேசுவரரைத் தரிசித்து வருங்காலத்து அங்குள்ள மாதர்கள் தடாகத்திற் சென்று புனலாடும்போது பயனற்ற வீண் பாட்டுக்களைப் படிப்பதைக் கண்டு அவர்கள்மீது கருணை கொண்டு அம்மாதர்கள் ஓதிப் புனலாடும் வண்ணம் திருவெம்பாவை என்னும் இருபது திருவாசகங்களையும் பாடியருளினர். இத்திருவெம்பாவை திருவருட்சத்தியை வியந்து பாடப்பட்டவையாகும். ஆன்ம மலமாகிய இருளிற் கிடந்து தஞ்சாது பரிபாகத்தைப் பெறும்பொருட்டுத் திருவருட் பிரவாகமாகிய தடாகத்துள் மூழ்கும்படி அதனை எழுப்புவதே திருவெம்பாவையின் தத்துவார்த்தமாகும். மலத்தைக் கழுவுவதே ஸ்நானஞ் செய்தலென்பதனையும் திருவருட் பெருக்கே தடாக மென்பதையும் மாணிவாசகப்பெருமான் "............ தங்கண்மலங் கழுவுவார் வந்து சார்தலினால், எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்கு மடுவிற்..........பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோரெம் பாவாய்" என எடுத்துக் காட்டி இருப்பதனால் இனிது விளங்கும்

மலவிருளிற் கிடந்து அஞ்சும் ஆன்மாவைப் பரிபாக மடைதற்குத் திருவருளிற் படியும் வண்ணம் அழைத்தலே திருவெம்பாவையின் தத்துவார்த்தமென்பது "மலவிருளுற்றுறங்காமல் மன்னு பரிபாக வருட் செல்முழுக வருக வெனச் செப்பல் திருவெம்பாவை" என வரும் திருப்பெருந்துறைப் புராணச் செய்யுட் பாகத்தால் இனிது அறியத்தக்கதாம். இத்திருவெம்பாவைக்குரிய பத்துத் தினங்களிலும் ஆன்மார்த்தம் பரார்த்தம் என்னும் பூசைக்காலங்களில் ஓதப்படவேண்டியது திருவெம்பாவையேயாகும்.

நற்சைவ நன்மக்கள் மார்கழி மாசம் முழுவதும் புலரிக்காலத்து நித்திரை விட்டெழுந்து ஸ்நானஞ் செய்து சந்தியாவந்தனம் முதலியன முடித்துக் கிரமமாக ஆலயதரிசனஞ் செய்தல் வேண்டும். பெண்களாயுள்ளோரும் இந்த மாதத்தில் தத்தம் இல்லங்கள் தோறும் மேலே சொன்னபிரகாரம் மார்கழிப் பிள்ளையார் வைத்து வணங்கி ஆலயதரிசனஞ் செய்தல் வேண்டும். இங்குள்ள சிவாலயங்களிலும் மடாலயங்களிலும் வித்தியாலயங்களிலும் சுத்தமான இல்லங்களிலும் திருவாதவூரடிகள் புராணபடனஞ் செய்தல் வேண்டும். நாள்தோறும் எடுத்துச் சேமித்து வைத்து வந்த மார்கழிப் பிள்ளையாரை யெல்லாம் மகா சங்கிராந்தியின்பின் ஒருங்கு சேர்த்து அலங்கரித்துப் பொங்கல் செய்து மோதகம் முதலியன நிவேதித்துச் சிறுதேர்கட்டி அதன்கண் வாத்திய சகிதமாகவேனும் சங்காதத்தோடேனும் எழுந்தருளுவித்துக் கொண்டுபோய் நதியிலேனும் தடாகத்திலேனும் விட்டுவிடல் வேண்டும்.

திருத்திக்கொள்க

சென்ற (18-12-41) வியாழக்கிழமைப் பிரசுரத்தில் "ஆசிரியர் கூற்றில் மணிலாத் தீவை ஜப்பானியர் கைப்பற்றி விட்டார்களாம்" என வந்துள்ளதை "மணிலாத் தீவின்மீது யப்பானியர்குண்டுகளைப் பொழிந்தனராம்" எனத் திருத்திக் கொள்க.

அரிசிவிலையைக் கூட்டிச் சொன்னதாக வழக்கு

பெரிய கடையில் வியாபாரஞ் செய்யும் K. E. சின்னத்துரையும் சிவசம்புவும் சென்ற 19-12-41-ந் திகதிபிற்பகல் 3 அல்லது 3½ மணியளவில் வெவ்வேறு இரு முகமதியர்கள் முத்தச்சம்பா அரிசியை விலை கேட்டபோது, அவர்கள் மூட்டை ஒன்றுக்கு ரூபா 16 சதம் 75 என்று விலை கூறியதாயும் அப்போது முகமதியர்கள் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்படி விலை ரூபா 14 சதம் 75 என்றே குறிக்கப்பட்டிருப்பதாயுஞ் சொன்னபோது வியாபாரிகள் அவர்கட்குத் தங்களிடம் விற்பனைக்கு அரிசியில்லையென்று சொல்லிவிட்டார்களென்று ஒரு முறைப்பாடு யாழ்ப்பாணம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிசார் இன்று கடைக்காரர்கள் இருவரையும் நீதிபதி மிஸ்றர் குவின்டன் பெர்னாண்டோ முன்னிலைக்குக்கொண்டுவந்து தாங்கள் இன்னும் விசாரணையை முடிக்காததால் அவர்களைப் பிணையில் விட்டு விசாரணையைத் தவணை யிடும்படி கேட்டனர். நீதிபதி இருவரையும் தனித்தனி ரூபா 250 பிணையில் விட்டு விசாரணையை வருகிற 23-12-41 - ந் திகதிக்குத் தவணை யிட்டார். ந-கி

கோப்பாயில் தாலிக்கொடித் திருட்டு வழக்கு

தீர்ப்புக் கூறுவது தவணையிடப் பட்டது

20-12-41

கோப்பாயில் வசிக்கும் 12 வயதுக்குட்பட்ட குழந்தையன்-சின்னத்துரை யென்னும் சிறுவன் அவ்வூர்ச் சிதம்பரி-கந்தையாவென்பவனுக்குரிய ரூபா 175 பெறுமதியான பவுண் சங்கிலியையும் தாலியையுங் களவாடினதாகக் குற்றஞ்சாட்டி ஒரு வழக்கைக் கோப்பாய்ப் பொலிசார் யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்றர் குவின்டன் பெர்னாண்டோ முன்னிலையிற் றொடர்ந்தார்.

சிதம்பரி-கந்தையா கூறியதாவது:-

சென்ற 10-12-41ந் திகதி இரவு நான் நித்திரைக்குச் சென்றபோது என்னுடைய மனைவி சேதுப்பிள்ளை தன்னுடைய தாலியையும் சங்கிலியையும் என்னுடைய பாதுகாப்பில் வைத்துக் கொள்ளும்படி தந்தாள். அதனை நான் படுத்திருந்த தலையணைக்குக் கீழ் வைத்துவிட்டு நித்திரை செய்தேன். எனது பக்கத்தில் என்னுடைய மனைவியும் மனைவியாரின் சகோதரியாகிய எட்டு வயதுச் சிறுமி சின்னத்தங்கமும் எங்களோடு வேலைக்கு நின்ற எதிரியாகிய குழந்தையன்-சின்னத்துரையும் நித்திரை செய்தனர். எதிரி என்னுடையசொந்தக்காரன். அவன் ஆடுமாடுகளை மேய்ப்பவன். அன்று காலை நான் நித்திரைவிட்டு எழுந்ததும் கள்ளுச் சீவச் சென்றுவிட்டேன். திரும்பி நான் வீட்டுக்கு வந்ததும் என்னுடைய மனைவி சங்கிலியையும் தாலியையும் எங்கே வைத்தேன் என்று என்னிடம் கேட்டாள். நான் தலையணைக்குக்கீழ் வைத்ததாக அவளிடம் கூறினேன். அவள் அவ்விடத்தில் காணப்படவில்லை என்று கூறினாள். நான் சின்னத்தங்கத்திடம் விசாரித்தேன். சின்னத்தங்கம் எதிரி எடுத்துக் கொண்டு போனதாகக் கூறினாள். நான் எதிரியிடம் கேட்டபோது எதிரி மறுத்துவிட்டான். நான் பொலிசாருக்கு இதனை அறிவித்தேன். அதன் விலை ரூபா 175. இதன்பின்னர்ச் சிறுமியாகிய சின்னத்தங்கம் சாக்ஷியம் கூறினாள்.

எதிரிமீது களவெடுத்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டபோது எதிரி தான் குற்றவாளியென்றும், தான் அதனைத் தம்முடைய தமையனாகிய முத்தனுடைய தூண்டுதலால் எடுத்து அவனிடம் கொடுத்ததாகவும் கூறினான். நீதிபதி எதிரியைச் சல்வேஷன் ஆமிப் பாதுகாப்பில்விட்டு எதிரியின் கைவிரலடையாளத்தை எடுக்கும்படி கட்டளையிட்டுத் தீர்ப்புக்கூறுவதை வருகிற 23-12-41 ந் திகதிக்குத்தவணையிட்டார். ந-கி.

நாவாந்துறைக் கத்திக் குத்து வழக்கு

எதிரிக்கு அபராதமும் நன்னடத்தைப் பிணையும்

நாவாந்துறையில் வசிக்கும் சவுரிமுத்து-ஆசீர்வாதம் அவ்வூர்ச் செபஸ்தி-சுவாம்பிள்ளைக்குக் கத்தியாற் குத்திக் காயம் வருவித்ததாகக் குற்றஞ் சாட்டிய வழக்கு நீதிபதி மிஸ்றர். குவின்டன் பெர்னாண்டோ முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணையின் பின், நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு 100 ரூபா அபராதமும் 100 ரூபாவில் ஆறுமாதத்திற்கு நன்னடத்தைப் பிணை கொடுக்க வேண்டு மென்றும் மேலும் அபராதப் பணம் இறுத்தாற் காயக்காரனுக்கு ரூபா 300 கொடுக்கப்படவேண்டு மென்றுங் கூறினர். ந-கி

மானிப்பாயிற் பொல்லடி

எதிரிக்கு 3 மாதக் கடூழிய மறியற்றண்டனை

17- 12- 41

மானிப்பாயில் வசிக்கும் முருகேசு- நாகலிங்கம் அவ்வூர் நாகமுத்து-வேலாயுதனுக்குப் பொல்லாலடித்துக் காயம் வருவித்ததாகக் குற்றஞ் சாட்டிய வழக்கு நீதிபதி மிஸ்றர் குவின்டன் பெர்னாண்டோ முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார். எதிரி வேறொரு வழக்குச் சம்பந்தமாக இப்பொழுது மறியல் தண்டனை அனுபவித்து வருகிறார் இவ்வழக்கிலும் நீதிபதி எதிரிக்கு மூன்றுமாதக் கடூழிய மறியற்றண்டனையும் ஆறுமாதத்திற்கு நன்னடத்தைப் பிணையும் விதித்தார். ந-கி

இலங்கையின் யுத்த முயற்சி

மூலப்பொருள்களை ஆராய்ச்சிசெய்ய ஏற்பாடு

அரசாங்கத்துக்கு ரசாயன சங்கத்தின் சேவை

கைத்தொழில் வர்த்தக டைரெக்டர் மிஸ்றர். டீ. எச். பால்பர் சனிக்கிழமையன்று இலங்கை ரசாயன சங்கத்தில் நிகழ்த்திய ஒருசொற்பொழிவின்போது நாம் இதுவரை வெளிநாடுகளிலிருந்து பெற்ற பண்டசாமான்களிற் சாத்தியமானவற்றை இலங்கையிலே உற்பத்திசெய்ய வேண்டிய நிலைமையில் நாம் இப்பொழுது இருக்கிறோம் என்றுகூறினார். அவர் மேலுங் கூறியதாவது:-

"இலங்கை விஷயங்களைச் சமாளிப்பதற்கான வழிவகைகளைக் கண்டு பிடிப்பதற்கு ஒரு நிர்வாக சபையை உடனே அமைப்பது மிகவும் உபயோகமாக இருக்கும். அடுத்தபடியாகச் செய்ய வேண்டிய காரியம் இலங்கையிலுள்ள வேலைசெய்பவர்களை ஒன்றுசேர்ப்பதாகும் ஆராய்ச்சிவேலையைத் துரிதமாக நடத்த வேண்டும்.

அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கிடைக்கக்கூடிய மூலப்பொருள்களனைத்தையும் கண்டுபிடிப்பதற்கும் இலங்கையில் மூலப்பொருள்கள் கிடைக்குந் துறைமுகங்களைப் பரிசீலனைசெய்வதற்கும் சிலதிட்டங்களைத் தயாரிப்பதில் ஒத்துழைப்பார்களென்பது நிச்சயம்.

பெற்றோல் யுத்ததளவாட உற்பத்திமுதலியன இலங்கையின் யுத்த முயற்சிக்கு அவசியமான பிரதான பொருளைச் சேர்ந்தனவாகும். தெரிவுசெய்யப்படும் நிருவாகசபை இப்பொருட்களை இலங்கையில் வெற்றிகரமாக உற்பத்திசெய்ய முடியுமா என்பதைக் கண்டுபிடிக்கும்.

மேற்படி யோசனைப்படி 10 பேர் அடங்கிய ஒருநிருவாகசபை தெரிவு செய்யப்பட்டது.

சபைதனது சேவைகளையும் திறமைகளையும் இலங்கை அரசாங்கத்தாரின் விருப்பத்தின்படி உபயோகித்தற்கும் விட்டுவிடுவதென்று தீர்மானித்தது.

மிஸ்றர். ஏ. புருஷ் ஜலசபனைபற்றி ஒரு சொற்பொழிவாற்றினர்.

இலங்கையில் யுத்த மந்திரி சபை

நிருவாக சபைகளின் யோசனை

கொழும்பு, டிச, 13— ஜப்பான் பிரிட்டனுக்கு எதிராகச் சண்டையிட்டிருப்பதன் பலனாக உள்ள நிலைமையைப் பற்றி ஆலோசிக்க அரசாங்க சபையை அவசரமாகக் கூட்ட வேண்டுமென்று முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது. அரசாங்க சபையின் அவசரக்கூட்டம் வருகிற செவ்வாய்க்கிழமை நடைபெறுமென்று முதலிற் றெரிய வந்தது. ஆயின், இது சம்பந்தமாக நேற்று மந்திரி சபையார் கூடி ஆலோசித்ததாகவும்,பல காரணங்களை உத்தேசித்துக் குறித்த அரசாங்க சபையின் அவசரக் கூட்டத்தைப் புதன்கிழமை கூட்டவேண்டு மென்று தீர்மானித்திருப்பதாகவுந் தெரிய வருகின்றது. அது சமயம் பாதுகாப்புச்செலவுகளுக்காக 2 கோடியே50 லட்சம் ரூபாய் அநுமதிக்குமாறு அரசாங்க சபையில் ஒரு பிரேரணை கொண்டு வரப்படுமாம். இதை நேற்று நடந்த மந்திரிசபைக் கூட்டம் அங்கீகரித்திருக்கிறதென்று தெரிகிறது. உள்நாட்டு நிருவாக சபை, சுயதலதாபன நிருவாகசபை ஆகியவை ஒரு யுத்தக் கவுன்ஸிலில் அல்லது யுத்தமந்திரி சபையில் நிர்மாணிக்க வேண்டுமென்றும், அச்சபையில் அரசாங்கசபை அங்கத்தவர்களிலிருவரைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் ஓர் ஆலோசனையைக் கூறியிருக்கின்றன என்று தெரிய வருகிறது.

சைவப்பிரசங்கம்

23-12-41 செவ்வாய்க்கிழமை மாலை 5மணி 30 நிமிடம் தொடக்கம் நல்லூர் ஸ்ரீ கைலாயபிள்ளையார் கோயிலில் சைவத்திருவாளர் புரிசை சு. முருகேச முதலியார் அவர்கள் 'வள்ளியம்மையார் திருமணம்' என்னும் பொருள்பற்றி ஓர் பிரசங்கம் செய்வார்களென அறிகின்றோம்.

'நாம் கோருவது பூரண சுயேச்சையையே'

'அதில் விட்டுக் கொடுப்பதற்கில்லை'

அலகாபாத் டிச 15

அலகாபாத் சர்வகலாசாலைச் சங்கத்தினுதரவில் இன்று மாலை நடந்த கூட்டமொன்றிற் பேசுகையில், பண்டித ஜவஹர்லால்நேரு இந்திய சுயேச்சைக் கோரிக்கையைப் பற்றிப் பிரஸ்தாபித்தார்.

"குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள்ளாகக் குடியேற்ற நாட்டந்தஸ்து வழங்கப்படுவதைப் பற்றிக் கூடச் சிந்திப்பது எனக்குச் சாத்தியமல்ல. பூரண சுயேச்சையே எங்கள் உத்தேசம்" என்று அவர் கூறினர்.

"சுயேச்சை விஷயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் சரி, நாட்டிலுள்ள எந்தக் கோஷ்டிக்கும் சரி. இந்தியா விட்டுக் கொடுப்பதற்கில்லை" என்றும் அவர் தெரிவித்தார்.

'நாட்டிற்குத் துரோகம்'

ஜவஹர் தமது பிரசங்கத்தில் கூறியதாவது:—

குடியேற்ற நாட்டந்தஸ்தைப்பற்றிப் பேசுபவர்கள், அவர்கள் எவ்வளவு பிரபலஸ்தர்களாக இருந்தாலும் சரி, எவ்வளவு உண்மையாக உழைப்பவர்களாயினும் சரி நிச்சயமாக நாட்டிற்குத் துரோகமே இழைக்கின்றனர்.

இங்கிலாந்து நமது தாய்நாடல்ல; ஆகவே, இந்தியா அத்தேசத்தினின்று பிறக்கவில்லை. பிரிட்டனிலுள்ளவர்களுக்குத் தான் தக்க பருவம் வந்ததற்குப்பிறகு பொறுப்பும் படிப்படியாக அதிகாரமும் வழங்கப்பட வேண்டும். இந்தியாவின் கலைச்சிறப்பு அத்தகைய நிலைமைக்கு இடங் கொடுக்கவில்லை. நம்முடைய பாரம்பரியக் கலை தனிப் பெருமை வாய்ந்தது; நம்முடைய சரித்திரமும் பிரத்யேக ஒளியுடன் கூடியது.

'விட்டுக் கொடுப்பதற்கில்லை'

தவிர, உலக நிலைமை வெகு துரிதமாக மாறி வருகிறது. ஒவ்வொரு சம்பவத்துக்கும் ஒரு மாறுதல் ஏற்படுகிறது. ஆகவே, குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள்ளாகக் குடியேற்றநாட்டந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென்பது பற்றிய பேச்செல்லாம் அர்த்தமற்றதாகும்.

நாம் வேண்டுவது பூரண சுயேச்சை. அதாவது, பிரிட்டிஷாரின் சம்பந்தம் நமக்குக் கூடாது. இப்படிச் சொல்லுவதால் நாம் தனித்துத்தான் வாழவேண்டுமென்று அர்த்தமல்ல. புதிய உலக முறையில் நம்முடைய சொந்த உரிமைகளுடன் வாழவேண்டுமென்பதே அதற்குப் பொருள். இந்திய சுயேச்சை விஷயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்துடனோ அல்லதுநாட்டிலுள்ள எந்தக் கோஷ்டியுடனோ இந்தியா சமரஸமாகப் போவதற்கில்லை.

ருஷ்யப் போராட்டம்

ருஷ்யப் போராட்டம் ஒரு இதிகாசம்போ லிருக்கிறது. ருஷ்யரின் தீரமும் உறுதியும் செப்பத்தரமன்று. இந்த யுத்தத்திலேயே இதுதான் சிறந்து விளங்கும் விஷயம். இடங்களைக் கொளுத்திவிடும் ரஷ்யரின் கொள்கை மிகவும் உன்னதமானதாகும். மகத்தானதொரு காரியத்துக்காக அவர்கள் இத்தகைய தியாகத்தில் இறங்குகின்றனர். ஸோவியத்தின் ராஜ்ய, பொருளாதார அஸ்திவாரம் போராட்டத்தைச் சமாளிக்கக்கூடிய வகையிற் பலம் பெற்றதாக இருக்கிறது.

மாணவர்கள் தங்கள் கடமையை உணர்ந்து உழைக்க வேண்டும். பிணக்குக் கட்டுப்பாட்டை மீறுதல், தேர்தல் வேலை இவற்றில் அவர்கள் ஈடுபடக்கூடாது. உணர்ச்சியில்லாமல் வெறுமனே கோஷங்களை உச்சரிப்பதால் பலனில்லை.

குருவார அன்னசத்திர மகாசபைப் பகிரங்கக் கூட்டம்

வண்ணார்பண்ணை நாவலர் வீதியின் தென்புறமாயுள்ள காக்கையினர் வளவிலிருக்கும் குருவார அன்னசத்திர மண்டபத்தில் நிகழும் விஷு௵ கார்த்திகைமீ 29-ந் திகதி (14-12 41) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு இக் கூட்டம் ஆரம்பமாயிற்று. அத்தருணம் ஆசிரியர் ஸ்ரீமான். சி. நாகையா அவர்கள் ஸ்ரீமான். வே. மூ. வேலாயுதபிள்ளை அவர்களாற் பிரேரிக்கப்பெற்று ஸ்ரீமான். வை. செல்லையா அவர்களால் அநுவதிக்கப் பெற்றுச் சபையின் ஏகசம்மதத்துடன் தலைமை வகித்தார்கள்.

ஸ்ரீமான். சு. பொ. கந்தையா அவர்கள் தற்காலிகக் காரியதரிசியாக ஸ்ரீமான். இ. செ. மன்மதராயன் அவர்களாற் பிரேரிக்கப்பெற்று ஸ்ரீமான். கோ. தர்மலிங்கம் அவர்களால் அநுவதிப்புற்றுத் தெரிவு செய்யப்பெற்றார்கள்.

தலைவரவர்கள் கூட்டத்தின் நோக்கத்தை விரித்துக் கூறுகையில் சத்திரத் தருமசாதனத்தின் வரலாற்றையும், முன்னைய தருமகர்த்தா சபையையும் அது எப்போது அமைக்கப்பெற்று எவ்விதம் வளர்வுற்றது என்பவற்றையும் எடுத்துக்கூறி முன்னைய தருமகர்த்தாக்களில் இப்போது இருப்பவரான ஸ்ரீமான். வே.மூ. வேலாயுதபிள்ளை அவர்களோடு இன்னும் வேறு நால்வரைத் தருமகர்த்தாக்களாகத் தெரிவு செய்ய வேண்டுமென்றும் இந்நால்வரில் முன்னைய தருமகர்த்தாக்களின் வழித்தோன்றல்களான ஸ்ரீமான். த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்களும் ஸ்ரீமான்.இ.க.சுப்பிரமணியம் அவர்களும் தெரிவு செய்யப்பெறுதல் தகுதியுடைத்தென்றுங் காட்டி ஏனைய இருவரின் தெரிவைச் சபையாரின் விருப்பத்திற்கே விட்டு இத்தரும கர்த்தாக்களின் தேவையையும் அவசியத்தையும் நன்கு விளக்கினர்கள்.

முதலாம் பிரேரணை

"முன்னைய தருமகர்த்தாக்களில் ஒருவரான ஸ்ரீமான். வே. மூ. வேலாயுதபிள்ளை அவர்களோடு நியாயதுரந்தரர் ஸ்ரீமான். த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்களும் ஸ்ரீமான். இ. க. சுப்பிரமணியம் அவர்களும் பகிரங்கக்கணக்குப் பரிசோதகர் ஸ்ரீமான். சு. பொ. கந்தையா அவர்களும் ஸ்ரீமான். இ. செ. மன்மதராயன் அவர்களும் தருமகர்த்தாக்களாக நியமிக்கப்படவேண்டும்" என நியாயவாதி ஸ்ரீமான். V. S. சோமசுந்தரம் அவர்களாற் பிரேரிக்கப் பெற்று ஸ்ரீமான். த. கந்தையா அவர்களால் அநுவதிப்புற்றுச் சபையாரால் தெரிவு செய்யப்பெற்றார்கள்.

இதன்பின், சத்திரமிருக்குங் காக்கையினர் வளவின் ஒரு பகுதியைச் சைவ வித்தியா விருத்திச் சங்கத்திற்குக் குத்தகையாகக் கொடுத்து அதில் ஒரு பாடசாலை ஸ்தாபிக்கச் செய்யும் விஷயம் ஆலோசனைக் கெடுத்துக் கொள்ளப்பெற்றது.

தலைவர் ஸ்ரீமான். சி. நாகையா அவர்கள் "மேலே சொல்லப்பெற்ற காணியி னொரு பகுதியைச் சைவ வித்தியா விருத்திச் சங்கத்துக்குப் பாடசாலை ஸ்தாபிப்பதற்கு 99 வருஷத்துக்குக் குத்தகையாகக் கொடுக்க வேண்டும்" என ஒரு தீர்மானத்தைப் பிரேரித்தார்கள்.

அச்சமயம் நியாயதுரந்தரர் ஸ்ரீமான். த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் சத்திரத் தருமங்களைப் பாடசாலை எதுவிதமும் பாதிக்காதபடி இது விஷயம் சபையாரால் நன்கு ஆலோசிக்கப்பட வேண்டியதொன்றென வேண்டிக் கொண்டார்கள். பின்னர், தலைவரவர்களும் நியாயதுரந்தரர் ஸ்ரீமான். த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்களும் ஸ்ரீமான். இ. க. சுப்பிரமணியம் அவர்களும் ஏனையோரும் கலந்துரையாடியபின் நியாயதுரந்தரர் ஸ்ரீமான். த. முத்துச்சாமிப்பிள்ளையவர்களது திருத்தங்கள் ஆதரிக்கப் பெற்றுக் கீழ்க்காணும் தீர்மானம் தலைவர் ஸ்ரீமான்.சி. நாகையா அவர்களாற் பிரேரிக்கப் பெற்று ஸ்ரீமான். இ. கேதீஸ்வரநாதன் அவர்களால் அநுவதிக்கப் பெற்றுச் சபையாரது ஏகமனதுடன் நிறைவெய்தியது.

இரண்டாம் பிரேரணை

"இச்சபையாராகிய நாங்கள் எங்களாற் றெரியப் பெற்ற தருமகர்த்தாக்களுக்கு அன்னசத்திரத்தின் காணியி லொரு பகுதியைச் சைவவித்தியாவிருத்திச் சங்கத்தாருக்குப் பள்ளிக்கூடம் ஸ்தாபிப்பதற்காக 99 வருஷத்துக்குக் குத்தகை கொடுப்பதற்கு எங்கள் தத்துவத்தை அளிக்கிறோம்."

பின்னர், தோத்திரத்துடன் கூட்டம் நிறைவெய்தியது.

காரியதரிசி
மேற்படி சபை.

யுத்தமும் இலங்கை நிலையும்

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

களிலிருந்து கூடுதலான நான்கு பேரை நியமிக்க உத்தேசித்திருக்கிறேன். இவர்கள் சம்பந்தப்பட்ட சமூகத்தின் பிரதிநிதிகளாகக் கருதப்படமாட்டார்கள். அக் கமிட்டியின் வேலைகளும் விவாதங்களும் இரகசியமாகவே இருக்கும். கமிட்டி அங்கத்தவர்கள் எவரும் வெளியாருக்கு எவ்வித தகவலும் கொடுக்க முடியாது. ஆனால், உடப்புநிலைமை பற்றிப் பொதுமக்களுக்கு அவ்வப்போது திட்டவட்டமான தகவல்கள் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டியதவசியம்.

இப்போதைய நிலைமை

இனிமேல் தற்போதையநிலைமை பற்றிச் சிறிது ஆராய்வாம். இலங்கையின் இராணுவப் பாதுகாப்பு விஷயம் ஏகாதிபத்திய அரசாங்கத்தால் இந்தியாவின் பிரதம சேனுதிபதியான ஜெனரல் வேவல் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதென்பதை இப்பொழுது பொதுவாக அனைவரும் அறிந்திருக்கவேண்டும். ஜெனரல் வேவலுக்குக் கீழ் இலங்கையின் பிரதம சேனுதிபதியான ஜெனரல் இன்ஸ்கிப் நமது துருப்புகள் பாதுகாப்புகள் ஆகியவைகளைக் கவனித்து வருகிறார். அவர் மிகவும் திறமைசாலி. அவரை நாம் வரவேற்கிறோம். அவருக்கு வேண்டிய ஒத்தாசைபுரியத் தயாராகவிருக்கிறோம். நாம் இந்தியாவின் பிரதம சேனுதிபதியின் அதிகாரத்தின் கீழ் வந்திருப்பதால அவசரமான நேரத்தில் நமக்கு உதவிக்குப் புதிய துருப்புகள் எவ்வளவு வேண்டுமாயினும், கிடைக்க வசதி ஏற்பட்டிருக்கிறது. இராணுவத்துறையில் நாம் தனித்து நிற்கவில்லை. பிரதம சேனுதிபதி உசிதமென்று காணும்பொழுது இலங்கையின் உதவிக்குப் புதியபடைகள் உடனே வந்துசேரும். அப்படைகளை நாம் மனமுவந்து வரவேற்போம்.

பாதுகாப்புச் செலவுகளை ஏகாதிபத்திய அரசாங்கமும் ஸ்தல அரசாங்கமும் பகிர்ந்துகொள்ளும் பிரச்னையை இப்பொழுதுள்ள நிலைமையை அனுசரித்துப் புனர் ஆலோசனை செய்யவேண்டிய தவசியம். குடியேற்றநாட்டு மந்திரி இதுபற்றி மந்திரிசபையினருக்கு ஓர் அறிக்கை அனுப்புவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

விளக்கணைப்பின் அவசியம்

இப்பொழுது விளக்கணைப்புப் பற்றிச் சிறிது கூற விரும்புகிறேன். விளக்கணைப்பு அனுவசியமானதென்று சில வட்டாரங்களிற் கூறப்படுகிறது. உண்மை நிலைமையை நன்கு உணர்ந்து கொள்ளாததால் தான் இவ்விதம் கூறப்படுகிறது. தரைமூலமாக நாம் தாக்கப்படாதிருக்கலாமென்பது உண்மை. இச் சமயத்தில் சத்துரு ஏராளமான விமானத் துருப்புகளை அனுப்பி இலங்கைமீது படையெடுக்க முயற்சிக்க மாட்டானென்பதும் உண்மைதான். இருந்தாலும் சத்துரு தனது கடற்படையைக் கொண்டு, நமது துறைமுகங்களையும் சரக்குக் கப்பல்களையும 'ஸ்டோர்'களையும் போக்குவரத்துக்களையும் தாக்கக் கூடும். இது நடைபெறுதென்று கூறுவதற்கில்லை. சத்துரு நம்மீது வெடிகுண்டுவீசிய பின்புதான், விளக்குகள் அனைத்தையும் அணைக்க வேண்டுமென்று கூறுவது முற்றும் தவறான காரியமாகும். நமது விளக்கு வெளிச்சம் சத்துரு விமானங்கள் எளிதில இலங்கையை வந்து சேருவதற்கு அனுகூலமாக இருக்கும். அவசரமாக நாம் விளக்குகளை அணைக்கும் முனபே சத்துரு வழிகண்டு கொண்டு விடுவான். எனவே கிழக்குப் பிரதேசத்தில் யுத்தம் நடக்கும்வரை நாம் இதேமாதிரி விளக்கணைப்பு முறையை அனுஷ்டிக்கவேண்டியது அத்தியாவசியகமாக இருக்கிறது. சாம்ராஜ்யத்தின இதர பல நாடுகளில சென்ற இரண்டரை வருஷங்களாகப் பொதுமக்கள் விளக்கணைப்புத் திட்டத்திற்கு ஆளாகிவருகிறார்கள். நமக்குச் சிறிது அசௌகரியமேற்படலாம். எனினும் உற்சாகமாக ஒத்துழைக்கவேண்டியது நமது கடமை.

விமானத்தாக்குதல் பாதுகாப்பு

சத்துரு இலங்கைமீது விமானத் தாக்குதல்களை நடத்தினுல் ஆள்சேதங்களையும் பொருள்சேதங்களையும் தவிர்க்கமுடியாது. எனவே, விமானப் படையெடுப்புப் பாதுகாப்பு நடவடிக்கைபற்றிச் சிறிது கூறவிரும்புகிறேன். கொழும்பின் பெரும்பாகத்தில் பூமிக்கு வெகு சமீபத்தில் தண்ணீர் காணப்படுகிறது. இதனுல் கொழும்பில் பாதுகாப்பு மறைவிடங்களை அமைப்பது முடியாத காரியம். கொங்கிரீட் பாதுகாப்புமறைவிடங்களை அமைத்துக்கொள்வதற்கு வேண்டிய பொருட்களும் நம்மிடம் கிடையாது. கொங்கிரீட் கட்டிடமில்லாத எந்தப் பாதுகாப்பு மறைவிடங்களும் உயிரைப் போக்கும் பொறியாகவே இருக்குமென்பது நாம்கண்ட அநுபவம். எனவே பொது மறைவிடங்களின்றியே நாம்சத்துருவின் தாக்குதல்களைச் சமாளிக்கவேண்டியிருக்கிறது. மேலும் விமானத் தாக்குதல்களின்போது என்ன செய்ய வேண்டுமென்பதுபற்றி ஒவ்வொருவரும் நன்கு தெரிந்திருக்க வேண்டியதவசியம். சென்றவாரம் இவ்விஷயங்களடங்கிய சிறிய துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. விமானப் படையெடுப்புப் பாதுகாப்பு ஸ்தாபனம் மிகவும் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. நமது விமானப் படையெடுப்பு வார்டன்களின் தொகை ஏறக்குறைய 700பேர்களைக்கும் தொண்டர் படையில 3 அதிகாரிகளும் 48 வீரர்களுமிருக்கின்றனர். இவ்விரு பிரிவுகளின்பலமும் உடனே அதிகரிக்கப்படும்.

10 முனிசிபல் மருந்துச்சாலைகளிலும் பொலிஸ் பயிற்சிப் பாடசாலையிலும் செஞ்சிலுவைப் படையின் உத்தியோகஸ்தர்களிருந்துவருகிறார்கள். காயமடைந்தவர்களுக்கு இவர்கள் ஆரம்ப சிகிச்சை செய்வார்கள்.

கொழும்பில் விமானப் படையெடுப்புப் பாதுகாப்பு வேலைகள் அனைத்தையும் கொழும்பு நகரசபையாரிடம் ஒப்படைக்கும் ஏற்பாடுகள் இப்பொழுது செய்யப்படுகின்றன. வீட்டு நிருவாகஸ்தர்களும் காரியாலயங்களிலிருப்பவர்களும், இந்த ஆரம்ப சிகிச்சை ஏற்பாடுகளைத் திறம்படச் செய்துகொள்ளவேண்டியதவசியம்; எத்தகைய பிரமாதமான முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தாலும் உயிர்ச்சேதம் உடற்சேதம் பொருட்சேதம் ஆகியவைகளைத் தவிர்க்கமுடியாது. ஏனெனில், குண்டுகள் அவ்வளவு உக்கிரத்தன்மை வாய்ந்தவைகளாக இருக்கும். எனவே சிலர் நகரப் பகுதியிலிருந்து வெளியேறிப்போய்விடுவது பற்றி ஆலோசித்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

கட்டாய வெளியேற்றம் இப்பொழுதில்லை

பொதுமக்களைக் கட்டாயமாக வெளிப்பகுதிக்கு நடத்தவேண்டுமென்ற அளவுக்கு இப்பொழுது ஏதும் பெரிய நெருக்கடி ஏற்பட்டுவிடவில்லை. கட்டாயமாகப் பொதுமக்களை வெளியேநடத்துவதுபற்றி அரசாங்கம் இப்பொழுது ஆலோசித்துக்கொண்டிருக்கவில்லை. மேல் பூமிபகுதிகளில வாசஸ்தலங்களுள்ளவர்கள இஷ்டப்பட்டால் தங்கள் குடும்பங்களை அங்கு அனுப்பிவிடலாம். கொழும்பில் வேலை இல்லாதவர்களும் மேல்பூமிப் பகுதியிற் போய்த்தங்கி இருக்கலாம்.

பிரிட்டனைப்போற் கொழும்பில் அதிக ஆபத்துக்கள் இல்லாவிட்டாலும் ஓரளவு ஆபத்து இருக்கத்தான் வருகிறது. எனவே கொழும்பில் வேலை இல்லாதவர் மேல் பூமிப்பகுதியில் போய் வசிப்பதற்கு எத்தகைய ஆட்சேபமுமில்லை. சிலவேளை, குறிப்பிட்ட சில பகுதிகளிற் பொதுமக்களைக் கட்டாயமாக வெளியேற்றவேண்டிய அவசியமும் ஏற்படலாம். எனவே கொழும்பு நகரசபையார் ஜனக்கணக்கு எடுத்து வருகிறார்கள். இதுபற்றி எவரும் பீதியடையவேண்டியதில்லை. இதனுல் பொதுமக்கள் அதிக நம்பிக்கை கொள்ள வேண்டும். வருங்காலத்தில் பொதுமக்களை வெளியேற்றவேண்டியதேற்பட்டால், இந்த ஜனக்கணக்கு விவரம் அதிக உதவியாக இருக்கும்.

நேற்று நீங்கள் பத்திரிகைகளிற் படித்த விஷயங்களை இங்கு நான் மீண்டும் ஊர்ஜிதம் செய்ய விரும்புகிறேன். நமது கடற்கரையில் சத்துரு துருப்புகள் ஏதும் வந்து இறங்கிவிட்டால், பொதுமக்கள் அவரவர் வீடுகளில அமைதியாக இருக்க வேண்டும். இராணுவத்தாரின் நடமாட்டத்துக்கு இடைஞ்சல் இல்லாமலிருக்கப் பொதுமக்கள் தெருக்களில நடமாடக் கூடாது. இது மிகவும் பிரதானமான விஷயமாகும். செல்வாக்குள்ளவர்கள் இதைப் பொது மக்களுக்குச் சாந்தமான முறையிற் போதிக்க வேண்டும்.

தண்ணீரும் உணவும்

கொழும்புதண்ணீர்ச்சப்ளை துண்டிக்கப்படலாம். இதற்காக அநேக கிணறுகள் வெட்டப்படுகின்றன. குழாய்க் கிணறுகளும் அமைக்கப்படுகின்றன.

இலங்கையின் உணவு சப்ளை இப்பொழுது திருப்திகரமானதாக இருக்கிறது. நம்மிடமுள்ள கையிருப்பு உணவுப் பொருட்கள் சிறிதும் பாதிக்கப்படவில்லை. 6 வாரங்களுக்குப் பதில் இரண்டு மாதங்களுக்கு வேண்டிய அரிசி கையிருப்பு வைத்திருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பர்மா சப்ளை பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டால் சீட்டு முறைப்படி உணவு சப்ளை செய்யுந் திட்டம் உடனே செயலில் நடத்தப்படும். எனவே அவரவர் வீட்டுத் தோட்டங்களில் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து கொள்ள வேண்டியது அத்தியாவசியமானதாகும். அதாவது உணவுப் பொருள் உற்பத்தி விஷயத்தில் பொது மக்களைக் கட்டாயப்படுத்த அதிகாரம் வேண்டுமென்று விவசாய மந்திரி ஏற்கெனவே என்னிடம் தெரிவித்திருக்கிறார். அதற்கு வேண்டிய சட்டம் செய்துதரத் தயாராக விருப்பதாக நான் அவரிடம் சொல்லியிருக்கிறேன்.

அவசியமான வித்துக்களை வாங்குவதற்கு அவர் ஏற்கெனவே இந்தியாவுக்கு ஒருவரை அனுப்பியிருக்கிறார். பொதுமக்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களை அவரவரும் தாம்தாமே உற்பத்தி செய்துகொள்ள வற்புறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இதில் வெற்றி பெறுல் இலங்கைக்கு நிரந்தரமான நன்மை ஏற்படும்.

உள்நாட்டுப் பாதுகாப்பைப் பொறுத்தவரையில் விசேஷ ஏற்பாடுகள் செய்யப்படும். உள்நாட்டுப் பாதுகாப்புத் திட்டத்தின் விபரங்கள் இன்னும் என்னிடம் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆனுல், இது வெகு விரைவில் தயாரிக்கப்படுமென்று நம்புகிறேன்.

பெற்ரேல் கையிருப்பு

பெற்ரேல் எண்ணெயைப் பொறுத்தவரையில் நம்மிடம் இரண்டு மாதங்களுக்குத் தேவையான கையிருப்பு இருந்து வருகிறது. நமக்கு மேற்கொண்டு எண்ணெய் சப்ளை கிடைப்பது நின்றுவிடலாம். எனவே சமீபத்தில இரண்டாம்முறை பெற்ரேல் கட்டுப்பாடு குறைக்கப்பட்டது.

ஒத்துழைப்பு வேண்டும்

இவ்வளவுதான், நான் இலங்கையின் நிலைமைபற்றிக் கூறக்கூடியது. இதைக்கண்டு எவரும் பீதியோ, சோர்வோ அடையவேண்டியதில்லை. நாம் அனைவரும் மனச்சோர்வின்றி ஒத்துழைப்போம். யுத்தமேகங்கள் இலங்கைக்கு அதிக சமீப தூரத்திலிருக்கின்றன. இன்று வட மலாயாவிற் கடுமையான சண்டை நடந்துகொண்டிருக்கிறது. இராணுவ ஆடையிலோ அல்லது சாதாரண ஆடையிலோ இலங்காதேவியின் புதல்வர்கள், உச்சணைப் பிரதேசமதியிலிருந்து வருவோர்கள். இங்கிருக்கும் நாமும் நெருக்கடி ஏற்படும் காலத்தில் முன்னணியில் நின்று சத்துருவை எதிர்க்கத் தயாராகவிருக்க வேண்டும். இவ்விஷயங்களில் எதையும் செய்யத் தவறினுல், நாம் ஜனநாயக லக்ஷியத்தைக் கைவிட்டவர்களாவோம், இக் நிலைமையில் மூன்று விஷயங்கள் அத்தியாவசியமாக விருக்கின்றன. அபிப்பிராய ஒற்றுமை, அடக்கமான பேச்சு, துரிதமான நடவடிக்கை ஆகியவைகளே இம் மூன்று விஷயங்களுமாகும். இம் மூன்று விஷயங்களிலும் பொது மக்களுக்கு இச்சபை முன்மாதிரி காட்டவேண்டும். இதில் நான் அதிக நம்பிக்கையுடையவனுக இருக்கிறேன்."

தொல்புரம் இளைஞர் கலாவிருத்திச்சங்க 12வது ஆண்டு நிறைவு விழா

மேற்படி சங்கத்தின் 12 வது ஆண்டு நிறைவுவிழா சென்ற திங்கட்கிழமை மாலை 6-30 மணியளவில், சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில், உதவி மாகாணத்தலைவர் திரு. O. A. வீரசிங்க C. C. S, அவர்களின் தலைமையின் கீழ் ஆரம்பமாயது. சங்கத்து அங்கத்தவர்களுள் வியாசம், பேச்சு, சங்கீதம முதலியவற்றில் மிகு திறமைகாட்டியோருக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. Miss E. M. தில்லையம்பலம் M.A, Ph. D, அவர்கள் பரிசில்களை வழங்கினர்.

பின் வடமாகாண உதவிப் பொலிஸ் அதிபர் திரு சிட்னி. டி. சொய்சா அவர்கள் "மக்களின் ஐக்கிய ஒத்துழைப்பு" என்ற விஷயம்பற்றி மிகவும் விரிவாக எடுத்துக் கூறினர். "சமூக முன்னேற்றம்" என்னும் விஷயம்பற்றி Miss E. M. தில்லையம்பலம் அவர்கள் ஓர் அரிய சொற்பொழிவாற்றினர். அதன் பின் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர்களுளொருவராகிய திரு. S V. சுப்பிரமணியம் அவர்கள் 'இளைஞர் சங்கங்களும் அவற்றின் கடமைகளும்' என்னும் விஷயம்பற்றி ஒருபேச்சு நிகழ்த்தினர். தலைவர் அவர்களாலும், வடமாகாண உதவிப் பொலிஸ் அதிபராலும் நிகழ்த்தப்பட்ட உபந்நியாசங்களை, யாழ்ப்பாணக் கல்லூரி யாசிரியருளொருவராகிய திரு. அரியரத்தினம் B. A., அவர்கள் தமிழில் மொழிபெயர்த்துக் கூறினர். ஈற்றில் சங்க வாழ்த்துப்பாப் பாடினர். மேற்படி சங்கத்து அங்கத்தவருள் இருவரால் நன்றி கூறப்பட்டுத்தேவாரபாராயணத்துடன் இனிது நிறைவேறியது.

—கடித

"சந்திரஹரி"

வெள்ளவத்தை நாடகசபையார் சென்ற வாரம் நடத்திக் காண்பித்த 'சந்திரஹரி' என்ற நாடகத்தைப் பார்த்த பின்னர் நமது நாட்டிலும் நாடகக்கலை மிக விருத்தி யடைந்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். சத்தியமே யல்லாது பொய்பேசாத ஹரிச்சந்திரன் நாடகம் ஏற்கெனவே தமிழ் மேடையில் பிரசித்தியாகி யிருக்கிறது. அதே கதையைத் தலைகீழாகமாற்றி, கதையிற் பொருள், இயல்பு, கதாபாத்திரங்கள் குணம், பெயர் முதலிய எல்லாவற்றையும் திரித்து, புகழ்பெற்ற நாடகாசிரியர் ராவ்பகதூர் சம்பந்த முதலியாரால் இயற்றப்பட்ட ஒருவகைக்கூத்து இந்தச் 'சந்திரஹரி'. பொய்யே யன்றி உண்மைபேசாத சந்திரஹரியை ஒரு மெய்யாவது பேசச் செய்ய வேண்டுமென்று 'சிஷ்டவாசி' என்ற முனிவர் (வசிஷ்டரின் மாறுபெயர்) மிகவும் எத்தனைப்படுகிறார். அரசனின் நாடுநகர் முதலியவற்றைப் பலவந்தமாகக் கைப்பற்றிக்கொண்டு அரசனையும் மனைவி மதிசந்திரையையும் மகன் தாசதேவனையும் காட்டிற்கு விரட்டி விடுகிறார். அரசனிடம் பாதுகாப்புக்காக வைத்த திரவியத்தை மீண்டும் பெறுவதற்குச் சிஷ்டவாசி எவ்வளவோ முயன்றும் பலன்படவில்லை. இப்படியே முனிவர் சந்திரஹரியைப் பலவித சூழ்ச்சிகளுக்காட்படுத்தியும் தோல்வியடைந்து இறுதியில் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு சந்திரஹரிக்குத் தன் தபசில் பாதியைக் கொடுத்துக் கடைத்தேறச் செய்கிறார்.]

கதை முழுவதும் ஒரே ஹாஸ்யச்சுவைதான் மிளிருகிறது. இதை நடித்த நடிகர்களும் தங்கள் பாத்திரங்களை மிகச் செவ்வனே நடித்திருக்கிறார்கள். கடந்த முப்பது வருடங்களுக்கு மேல் நாடகமேடையேறிப் பழுத்த அநுபவம் பெற்ற ஸ்ரீ சொர்ணலிங்கம் கதாநாயகன் சந்திரஹரியின் வேஷத்தில் உன்னதமாக நடித்திருக்கிறார். ஸ்ரீ சொர்ணலிங்கத்தின் நடிப்பில் பாத்திர விசேஷம் உண்டு. எந்தப் பாத்திரத்துக்கு வேஷம் போட்டாலும் அதே பாத்திரத்தின் அம்சங்களை மிகத்திறமையாக நடிக்க வல்ல ஒருவர். சந்திரஹரியின் துஷ்டகுணங்களைத் தத்ரூபமாகக் காட்டியதுடன் கூத்து விசேஷம் புலப்பட ஹாஸ்யச்சுவையை அழகாகக் காட்டினர். கொழும்பு மேடையில் நன்கு புகழ்பெற்ற இன்னொரு பழுத்த நடிகர் ஸ்ரீ திருவிளங்கம் சிஷ்டவாசிக்க நடித்த பாகம்" உயர்ந்த லக்ஷ்ய அமைதியுடனிருந்தது. இவர் முன் 'ஹரிச்சந்திர'வில் கதாநாயக வேஷம் தரித்துவிட்டு, இப்போது 'சிஷ்டவாசி' வேஷம் மெறதிநாயகத் தரித்து நடித்தது போற்றத்தக்கது. ஈசகட்சத்திரனுக நடித்த ஸ்ரீ பேரம்பலம் ஒரு தனி ஹாஸ்ய நடிகர். இவர் சினிமாவில் இருந்தால நல்ல புகழ் பெறக்கூடும். சந்திரஹரியின் மந்திரியாக நடித்த 'சாடிக்கேற மூடி' ஸ்ரீ தேவேந்திரன் நடிப்பும் சபையை அடிக்கடி சிரிக்கச் செய்தது.

பெண் வேஷதாரிகளில் 'மதிசந்திரை'யாக நடித்த ஸ்ரீ சிவஞானம் நல்ல தோற்றமுள்ளவராலும் குறைவில்லாதவராகக் காணப்பட்டார். ஸ்ரீ இரத்தினசாமி ஆசிரமப் பெண் வேஷத்தில் சாலகுணம் நிறைந்த நடிப்பைக் காட்டினர். தாசதேவனுக நடித்த சின்னஞ்சிறுவன் ரத்னநாதன் தான் அன்றைய வெற்றி முழுவதையும் கொண்டுபோய்விட்டான். ஒரே ஒரு பாட்டில் சபையோரின் இருதயத்தைக் கொள்ளை கொண்டு மீண்டும் மீண்டும் சபையோர் ஆரவாரித்து மகிழச்செய்த இவன் ஒரு குழந்தை நட்சத்திரம். அநேகமாக மற்றைய எல்லாருமே பழுதில்லாமல் நடித்தார்கள். மயானக்காட்சிதான் சிறிது நீண்டுவிட்டது. பாட்டுக்களைக் குறைத்திருக்கலாம், கேட்கவிட்டாலும் பாதகமில்லை. ஒருகாலத்தில் சகுணவிலாசசபை முதலியன சிறப்படைந்திருந்தன. வெள்ளவத்தை நாடக ஒரு கீர்த்திபெயர் பெற்று வாழும் என்பது எனது நம்பிக்கை.

—சிவம்

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக்கும் பருத்தித்துறை மு. நாம. மு. சே. சேவுகஞ்செட்டியார் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

நம்.	தி.	ரு.	ஊரும் பெயரும். நகையின் விபரம்.
1940ம் ஆண்டு ஜனவரி மாசம்			
6522	3	33	தும்பளை ஆ. சின்னத்துரை மினுகு காப்பு 1
6606	11	15	துன்னாலை தெற்கு வ. கந்தப்பு இனக் கீச்சுமணிக் கோர்வை 1
6634	13	11	மாதனை வே. வள்ளிநாச்சி நசிவு பிள்ளைக்காப்பு 1
6880	31	16	கரவெட்டி வடக்கு வ. கந்தவனம் இமி நீலக்கல்மோதிரம் 1
பெப்ரவரி மாசம்			
6913	2	130	மாதனை ச. சுப்பிரமணியம் பூ காப்பு சோடி 1
6982	7	365	மாதனை ஏ. நாகலிங்கம் நசிவு குண்டு 2உடன் கோது சாட்டுக்கொடி 1ம் சிலகல் முத்தில்லாத பெண்டன் 2ம் சிறு தாலித்துடன் சங்கிலி 1
7226	22	20	வல்வெட்டித்துறை கு. இராசலிங்கம் இன மின் கொக்கி மருக்கன்கல் இமி பதக்கத்துடன் நசிவு கருசமணிக்கோர் 1
7302	23	10	கரணவாய்தெற்கு சி. கந்தையா இன காட்டுக்கடுக்கன் சோ 1
மார்ச்சு மாசம்			
7405	7	15	புலோலிமேற்கு நா. பொன்னையா முத்துக்கட்டாத இமிபதக் 1
7423	8	12	புலோலிதெற்கு உ. முத்துக்குமாரு இமி தோடு சோடி 1
7545	18	7	புலோலிதெற்கு வ. பசுபதி இமி இன நசிவு அச்சரக்கூடு 1
7622	25	13	பருத்தித்துறை சி. ஆறுமுகம் இனதிருகுடன் இமிதோடுசோ 1
ஏப்பிரல்மாசம்			
8016	24	17	மாதனை ச. வல்லிபுரம் சிறு கைச்சங்கிலி சோடி 1
மே மாசம்			
8109	2	5	வியாபாரிமூலை சி. செல்லத்துரை சில்லறை உருப்படி 3ம் இன கட்டி 1
8178	6	22	மாதனை வ. மு. கார்த்திகேசு நசிவு பிள்ளைக்காப்பு சோடி 1
8387	23	45	பருத்தித்துறை சி. கு. க. ரெத்தினசபாபதி அரும்புதடை 2ம் ஆடுதன்மோதிரம் 1ம் ஒன்றுக்குத் திருகில்லாதஇமிதோசோ 1
8405	24	15	பருத்தித்துறை த. நவரெத்தினராசா சில முத்தில்லாத இமி பதக்கம் 1
ஜூன்மாசம்			
8540	4	6	மாதனை வ. வேலுப்பிள்ளை நசிவு திருமாங்கல்யம் 1
8559	6	8	அல்வாய்வடக்கு சி. மயில்வாகனம் திருகில்லாத நசிவு இமி தோடு சோடி 1
8591	9	6	வதிரி வே. குமாரு நசிவுஇளசிமிக்கிவாளி சிறுசுபெரிசு சோ 1
8606	10	40	மாதனை ஏ நாகலிங்கம் நசிவு கெட்டிக்காப்பு 1
8650	14	5	பருத்தித்துறை வ. பொன்னுச்சாமி நசிவு திருமாங்கல்யம் 1
8652	14	14	மாதனை க. சுப்பிரமணியம் எஸ். விலாசம்போட்ட மோதிரம் 1
8702	18	20	புலோலிதெற்கு வி. மயில்வாகனம் இமி செடிவேலைசெய்த அரைப்பவுன் 1
8716	19	50	தும்பளை ம. மரியம்மா நசிவு பிள்ளைக்காப்பு சோடி 1ம் இமி தோடு சோடி 1ம் ஷை மோதிரம் 1ம் கிளாவர் மோதிரம் 1
ஜூலைமாசம்			
9002	10	20	பருத்தித்துறை வி. தங்கராசா இமி ப இல்லாத பதக்கம் 1
9261	29	22	மாதனை ஏ நாகலிங்கம் இமி வெ கல் புரூச்சு 1
9262	29	13	மாதனை ஏ. நாகலிங்கம் இமி வெ கல் சிலேட்டு 1
9281	30	75	புலோலிதெற்கு வ. செல்லையா இமி டிம்மியுடன் திருகில்லாத நசிவு முரிச்சுக்குத்தி அட்டியல் 1

விற்பனவு நிகழும் விஷு வருஷம் மார்கழிமீ 23-ந்திகதி செவ்வாய்க்கிழமை (6.1.42) காலை 10 மணியளவில் எடுபட்டதை பிறகேக்கலாக மிகுதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விஞயகமுதலியார் குழந்தைவேலு,
வெந்தீஸ்மேஸ்தர்.

(Mis. 160, 22 & 25-12-41)

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
இல. 17051

கல்லூர் விசையரத்தினம் மருதப்பு
வழக்காளி

எதிராக

கந்தரோடைகாலஞ்சென்ற(1) Vசோமசுந்தரத்தின் ஆதனபராபரிப்புக் காறியும் தனக்காகவும் சோமசுந்தரம் கைம்பெண் இராசம்மா,

வண்கிழக்கு (2) சிவக்கொழுந்து சண்முகம் பெண்

(3)அன்னம்மாவும்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் மேற்குறித்த வழக்கிலெனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விவரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1942 ம் ஞு தை மீ 19-ந் உ திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஈர்வைத்தொகை ரூ. 980. 1941-ம் ஆண்டு புரட்டாதி மீ 19-ந் திகதி தொடக்கம் இறுக்குமட்டும் ஞு 1-க்கு 100க்கு 9 வீத வட்டியும் கோட்டுச்செலவு 160 ரூபாய் 29½ சதமும்.

காணியின் விபரம்

வண்கிழக்கு இறை நெல்லி வளவு பர நில இலச வீடும் பயிர்வகைகளும் தெற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் தூர்வையும், எல்லைகிழக்கு செல்லையாபெண் செல்லம்மாவின் ஆதனம்; வடக்கு சங்கரப்பிள்ளை இராமலிங்கத்தின் ஆதனம்; மேற்கு ஒழுங்கை, தெற்கு வேலுப்பிள்ளை சபாபதி பெண் தங்கம்மாவின் ஆதனம், இது அடங்கலும்.

க. பொன்னப்பா
வெந்தீஸ்மேஸ்தரும் கொம்மிஷனரும்
இணுவில்
21.12 41

Mis 156—22.12.41

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 16940

உடுவில் சண்முகம் சின்னையா
வழக்காளி

எதிர்

1 யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில் 188 ம் இலக்க இன்சோல்வன்சி வழக்கில் விஞசித்தம்பி மயில்வாகனத்தின் ஆதனத்தின் இன்சோல்வன்றிடம் சாட்டுதலைப் பெற்றிருக்கும் யாழ்ப்பாணம் சிதாரி பிலிப்பு மோசேஸ்.

2 தனது காலஞ்சென்ற மனைவி நாகம்மாவின் ஆதனத்துக்குப் பொறுப்பாளியாயிருக்கும் உடுவில் விஞசித்தம்பி மயில்வாகனம்.

எதிராளிகள்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் 16940ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விவரிக்கப்படும் துண்டுக் காணிகளை 1942-ம் ஞு தை (ஜனவரி) மீ 17ம் உ சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்வலிகாமம்வடக்குப்பகுதி உடுவில் கோவில்பற்று உடுவில்இறை கறுவியவத்தை கிலேப்பரப்பு இலாச்சம் 3 குழி 1¼ கல்வீடும் வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றுப்பங்கும் செய்பயிர் வான்பயிர்களும் இக்காணியிலிருந்து வடக்கேயிருக்கும் பிரசித்தறேட்டுக்குச் செல்லும் கையொழுங்கையின் பாவிப்புரித்தும் மேற்குப்பக்கத்துக் காணிக்காறனுக்குரிய கிணற்றுப்பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் பிறகேக்கலாக எல்லைகிழக்கும்வடக்கும் சின்னப்பு கார்த்திகேசுவுக்குரிய ஆதனம்.மேற்குசொல்லப்பட்ட கையொழுங்கையும் சின்னப்பு வைத்திலிங்கத்தின் ஆதனமும், தெற்கு கந்தையா தம்பித்துரையின் ஆதனம் இதுஅடங்கலும்.

2 மேற்படிஇறை அம்புலியபுலம் கிலேப்பரப்பு இலாட்சம் 22¾ வடலிகளும்பனைகளும்செய்பயிர் வான்பயிர்களும்இணறும் தெற்கேயிருக்கும் கிணற்றுப்பங்கும்எல்லைகிழக்குகாலஞ்சென்ற நியாகராசா அப்பாத்துரையின்உரிலமக்காறருக்கும் கதிரவேலு அருணம்பலத்துக்குமுரிய ஆதனம், வடக்கு கதிரவேலு கன்னித்தம்பிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற்கு ஒழுங்கை தெற்கு அம்பலவாணர் பூதருக்கும் வேலுப்பிள்ளை பெண்பொன்னுவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள், இதில் சொரியலாய் கிலேப்பரப்பு இலாச்சம் எட்டு அல்லது தொண்ணூற்றொன்றில் முப்பத்திரண்டு பங்கும்,

S. NARAYANASWAMY
கொம்மிஷனர்

யாழ்ப்பாணம்
1941 ஞு மார்கழி மீ 16-உ

Mis 157—22.12.41

நகரக் காலிசெய்ய வேண்டி வந்தால்...

ஜனத்தொகை கணக்கெடுக்க 500பேருக்குமேல் நியமனம்

கொழும்பு நகரைக் காலி செய்ய வேண்டிய அவசியமேற்படும் பட்சத்தில நகரின் ஜனத்தொகையைத் தடுப்பதற்காக நேற்று 500க்கதிகமானவர்களை நகரசபை தற்காலிகமாக நியமித்திருக்கிறது.

மேயர், உப-மேயர் சபை அங்கத்தவர்கள் நகரசபை நிருவாக அதிகாரிகள் ஆகியோர் இன்று காலை அவர்களுக்குப் பேட்டியளித்து அவர்களைப் பல்வேறு வார்டுகளுக்கும் நியமித்தனர். அவர்கள் ஒரு வார காலத்திற்குள் குறித்தவேலையைச் செய்து முடிக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

போசனஞ் செய்பவர்கள் இன்ன இன்ன திக்கு முகமாயிருந்து போசனஞ் செய்யவேண்டு மென்பதும் அதன்பலனும் பிறவும்

பிரம்மஸ்ரீ ச.பொன்னுஸ்வாமிகுருக்கள்
சுதுமலை.

போசனஞ் செய்பவர்கள் கிழக்குமுகமாகவேனும் தெற்கு முகமாகவேனும் இருந்து போசனஞ் செய்யவேண்டும். மேற்குமுகமாகவிருந்து போசனஞ் செய்வது அவ்வளவு குற்றமல்ல, வடக்குமுகமாகவிருந்து புசிப்பது ஒருபோதுங்கூடாது. வடக்கு முகமாயிருந்து புசிக்கக்கூடாதென்பதற்கு நியாயம் வடதிக்கிலிருந்தே பூமியின்மஹாசக்தி தெற்குப்பக்கமாகச் செல்கின்றது. இதனையே மின்சாரசக்தியென்று கூறுவர். வடக்குமுகமாக இருந்துபுசித்தால் அந்த மின்சாரசக்தி வந்து வயிற்றிற்றாக்கும். அதனுல் அசீரணம், மந்தம், மலசலபந்தம் வலி, முதலிய நோய்கள் உண்டாம் வடக்கு, வடகிழக்கில் இருந்தவருக்கு நாற்றுவீசும்போது உவார்த்தி, அசீரணம், குளிர்வாயு, பேதி, முதலியகொடிய நோய்களுண்டாகின்றன. இது அனுபவம் சுருதியுத்தியுமாம்.

சிரார்த்தகாலங்களிலே பிதிர்ஸ்தானத்திலிருந்து புசிப்பவர்கள் வடக்குமுகமாகவிருந்து புசிப்பதுவழக்கம், அவர்கள் இரண்டாமுறை புசிக்கக்கூடாது. ஒருநேரந்தான் புசிக்கவேண்டும். வடக்குமுகமாகவிருந்து புசித்தால் விரைவாகச் சீரணமாகமாட்டா. போசனமும் விரும்பாளன்னுந் தன்மையாலே அவர்களுக்கு அவ்வாறு நியமிக்கப்பட்டதாம். விஸ்வதேவஸ்தானத்தில் இருப்பவர்கள் கிழக்குமுகமாக இருப்பது முறை; ஏனெனில் மின்சாரசக்தி வயிற்றின்மேல் வேகமாய்த்தாக்காமல் பக்கத்தில் உராய்ந்துகொண்டுபோமாதலால்அவ்வளவுகெடுதியையுண்டாக்கா. சீரணம் மெதுவாயாகும். தெற்குமுகமாயிருந்து புசித்தால் அந்தமின்சாரசக்தி முதுகில் படுவதால் தீங்குஞ்செய்யா. தென்றற்காற்றின் விசேஷமென்பதே. அதுஉவர்த்தன்மையோடுவருவதால் சீரணத்திற்கு அநுகுணமாகவேயிருக்கும், விரைவாகச் சீரணமாகுமாம். இக்கருத்தையுள்ளடக்கியே சரீரபுஷ்டியை விரும்புகிறவன் தெற்கு முகமாயிருந்து புசிக்க வேண்டுமென்று ஆயுள்வேதங்கூறும்.

நான் போசனஞ்செய்யுங் காலத்திலே ஒரு பசுக்கறக்குங்காலம், அல்லது நாம் விரும்பியுள்ள காலமட்டும் அதிதிகளின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கவேண்டும். இதுதான் அதிதிபூசை அல்லது மநுஷ்ய யக்ஞமென்று சொல்லப்படும். அதிதியைக் கவனியாது போசனஞ்செய்வது தகாதென்று தருமசாஸ்திரங்கள் கூறும். அதிதிபூசையால் ஒருபோதும் நட்டம் வரமாட்டா.

அதிதியென்பதன்பொருள் நாள்கடாவதவன் என்பதாம். இதனுல்முன்னொருபோதும் வராதவனும், அந்த இடத்தில் போசனஞ்செய்ய வேறுவழியில்லாதவனுமான புதிதாகவந்தவனே அதிதி என்று சொல்லப்படுவான். அன்றி அவன்அகோராத்திரமே அதிதியாவான். மற்றைநாள் அவன் அதிதியாவதில்லை, அவனுக்காக வேறொன்றும் அதிகமாகச் செய்யவேண்டியதில்லை. போசனஞ்செய்யுஞ்சமயத்தில் வருகிறவன் சிநேகிதன், பகைவன், மூர்க்கன், மூடன், என்று கவனியாமல் அன்னமிட்டு உபசரிக்கவேண்டும். அவனை உபசரிப்பது சுவர்க்கபதவிக்குக் காரணமாகும்.

அதிதியை எவன்வீட்டில் உபசரிக்கப்படாமலிருப்புகிறுனே அவன்வீட்டில் செய்யப்படும் தேவபிதிர் காரியங்களத்தனையும் பிரயோசனமில்லையாம். அதிதியானவன் அந்த வீட்டுக்காரருக்குத் தன் பாவங்களைக் கொடுத்துவிட்டுஅவர்களுடைய புண்ணியங்களைக் கைக்கொண்டுபோகிறுன். அதிதியைப் பூசியாதபிராமணன் அத்தருணமே சண்டாளனுகிறுன்.

—தொடரும்.

அறிவிப்பு

ஆங்கில கலாசாலைகளில் ஸ்கூல் பைனல், எப். ஏ. ஸீனியர், பி. ஏ. ஸீனியர் வகுப்புகளிலகற்கும் மாணவர்களுக்காக 1942-ம் வருஷம் மார்ச் மாசம் 7-ந் திகதியில இம்மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் வழக்கம்போல் நடத்தப்பெறும ஆங்கிலத் தமிழ்ப்பரீட்சைக்குவரும் மாணவர்கள், 1942-ம் வருஷம் ஜனவரி மாதம் 26-ந் திகதிக்குள்ளும், விஷு வருஷம் பங்குனி மாதம் 24, 25, 26 (1942-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 6, 7, 8) தேதிகளில நடத்தப் பெறும் தனித்தமிழ்ப்பரீட்சைக்கு வரும் மாணவர்கள் விஷு வருஷம் தை மாதம் 15-ந் திகதி (28-1-42) க்குள்ளும் விண்ணப்ப பாரத்தையும் பரீட்சைக் கட்டணத்தொகையையும், இச்சங்கமாபிக மானேஜருக்கு அனுப்ப வேண்டுமென்றும், மேலே குறிப்பிட்ட தேதிகளுக்குப் பின்பு வரலாகும் யாவும் அங்கீகரிக்கப்பட மாட்டாவென்றும் இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

குறிப்பு:- சென்னை யூனிவர்சிடியாரால் 1942-ம் வருஷப் பரீட்சைக்கு, பி. ஏ. ஸீனியர், இண்டர்மீடியேட் ஸீனியர், ஸ்கூல் பைனல் வகுப்புகளுக்கு வைக்கப்பட்டுள்ள தமிழ்ப்பாடங்களே சங்கப் பரீட்சைக்கும் பாடங்களாகும். ஒன்றரை அணு ஸ்டாம்ப் அனுப்பினுல் விண்ணப்பப் பாரம் இவ் வாபிசினின்றும் பெறலாம்.

லக்ஷ்மீநாராயணையர்
மானேஜர்
மதுரைத்தமிழ்ச்சங்கம்
15-12-1941

புதிய [1942] பாடத்திட்டத்திற்கு
இயைந்த
தமிழ் இலக்கிய வாசகங்கள்

5-ம் 6-ம் 7-ம் வகுப்புகட்குரியவை
1 இலக்கியவாசகம் முதற்பாகம் சதம் 15
2 ,, இரண்டாம்பாகம் சதம் 20
3 ,, மூன்றும் பாகம் சதம் 25
செந்தமிழ்க் கருவூலம்

திரு. வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட உரையுடன் கூடியது. J. S. C. பரீட்சைக்கு ஆதாரமாக ஆறும் ஏழாம் தரங்களில் மாணவர்க்குச் செய்யுளிலக்கிய அறிவை வளர்த்தற்கேற்ற பாடபுத்தமாகக் கொள்ளத்தக்கது.

மனேஜர்
யாழ்ப்பாணம், சைவப்பிரகாச யந்திரசாலை.

வடமாகாண
ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்
1933-ம் ஆண்டு தொடக்கப் பெற்றது
அரசினரால் பதிவு செய்யப்பட்டது
அங்கத்தவர்கட்டணப்பணம் மாத்திரம் 45000 ரூபாவிற்குமேலிருக்கிறது
30 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு ஆசிரியரும் அங்கத்தினராய்ச் சேரலாம். மாதக்கட்டண விகிதம்:-
1-ம் வகுப்பு ரூ. 4-00 2-ம் வகுப்பு ரூ. 2-00
3-ம் வகுப்பு ரூ. 1-00
தேவையான விபரம் எம்மிடம் அறிந்து கொள்ளலாம்
ச. பொ. இராசையா
காரியதரிசி,
வடமாகாண ஆசிரியர்சகாயநிதிச்சங்கம்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
வண்ணார்பண்ணை
H 145 1-12-41—31-5-42

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,36700
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சந்தி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாகுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொலைவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.
Y 58 A. 21-11-40—20-11-41 (தி)

மெலிந்து
சோர்வுற்று
பலமிழந்து
ஊக்கமற்று
இருக்கும்
சகலருக்கும்
ஓர்விசேஷச்
செய்தி

ஜீவாதார உலோக சத்துக்களடங்கிய இந்தச்சிறந்த சாதனம் உங்களுக்குப்புதிய ஆரோக்கியமும் ஊக்கமும் பலமும் அளிக்கும்

பழனி சி. எம். சாமி அசல் தங்கபஸ்பத்தை இன்று முதலே சாப்பிட்டு வாருங்கள். உஷ்ணம், மேகம், கடுப்பு, மூலம், நீர்திவு, வாதம், தொய்வு, க்ஷயம், குன்மம் இவைபோன்ற ஏனைய எல்லா நோய்களும் நீங்கிவிடும், கண்டிப்பாகப் பலனடைவீர்கள். தேகம் பூராவும் புது ரத்தம் பாயும், பசி ருசியுண்டாகும், நரம்புகள் வலுவடையும், கண்கள் பிரகாசமடையும். நீங்கள் வாலிப பலமும் தேக திடகாத்திரமும் அடைவீர்கள்.

24 நாள் பஸ்பம் விலை ரூபா 10

தலைமை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S I
கிளை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்
Y221 31-3-41—30-3-42

தி மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள், சிமெந்துவகைகள்
விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்.
"புரோப்ரைட்டர்"
Y 19. 4-3-41—3-3-42 K. A. இரத்தினசிங்கம்

குழலும் யாழும்

1-ம் பக்கத்தொடர்ச்சி

அரங்கம். சித்திராபதியென்னும் கணிகைமகளாகிய மாதவியின் ஆடலையும் பாடலையும் கண்டுங்கேட்டும் மன்னனும் மக்களும் வியப்பெய்துகின்றனர். இசைவல்லோர் பலரையும் குழல், யாழ், முதலிய இசைக்கருவி பலவற்றையுங் காண்கின்றோம்.

மேலும் காலத்தை எதிர்த்துச் செல்லுகின்றோம். முடிமன்னரிருக்கையையும், குறுநில மன்னரிருக்கையையும், சேரசுகித் செல்லும் பொருநரையும், கூத்தரையும், பாணரையும், விறலியரையுங் காண்கின்றோம். சுதத்திலேயே பல இசைக்கருவிகளைக் காண்கின்றோம். அவற்றினது தோற்ற அமைப்புக்களையெல்லாம் ஆறுதலாக மற்றோரிடத்திலே 'இசைக்கருவிகள்' என்னுந் தலைப்பெயர்க்கீழ்ப் பேசுவோம். பாணன் கையிலிருப்பது இருபத்தொரு நரம்புடைய பேரியாழ். பாடினிகையிலிருப்பது ஏழு நரம்புடைய சீறியாழ். பிற்காலத்தார் இதனைச் செங்கோட்டியாழ் என்றனர்.

மேலும் எதிரேறிச் செல்கின்றோம். பொதிய மலையிலே அகத்தியனும் மாணுக்கரும் இசை மாபினை குறித்து ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பொதியத்திலே விருக்கவிட்டு, முன்னேறிச் செல்லுகின்றோம். நாற்றிசையிலும் பேரிருள்; கரைகாணுத கடல், குமரிநாடு கடலிலே யமிழ்ந்தினமையாலே, நாடிழந்த தமிழ் மக்கள் கப்பலேறி மேற்கு நோக்கிச் சென்றனர். மிசிரம், சுமேரு என்ற நாடுகளை யடைகின்றனர். இலங்கை மன்னனுகிய இராவணன் வளர்த்த இசைக் கலையினை அக்காட்டிலுள்ள மன்னர் முன்னிலையிலே காட்டுகின்றனர். அரசர்களும் குடிமக்களும் யாழிசையினைக் கேட்டு உள்ளமுருகுகின்றனர். பலவேறுவகையான யாழ்க் கருவிகளை யமைக்கின்றனர். சுமேரிய மொழியிலும், மிசிர (Egyptian) மொழியிலும் "பண்" என்னுந் தமிழ்ச் சொல் யாழ்க் கருவிக்குப் பெயராகிறது. குமரிநாட்டுப் பழந்தமிழரும் அச்சொல்லினைக் கருவிக்குப் பெயராக வழங்கியிருக்கலாம். அங்கிருந்து வேறு பல நாடுகளுக்கு இக்கருவி சென்று தெய்வம்போலப் போற்றப்படுகிறது.

காலநீரோட்டத்தை எதிரேறிச் சென்று, மீட்டும் குமரி நாட்டுக்கு வருகின்றோம். இராவணன் முதலிய மன்னருக்குமுன்பாகிய காலத்திலே இசை வளர்த்தோர், பாணன் பறையன், துடியன், கடம்பன் என்னுங் குடிமக்களும், இடையன், கடையன், துழையன், குறவன் என்னும் நிலமக்களுமாமெனக் காண்கின்றோம்.

குழலும் யாழும் முதலிலே உண்டான இடத்தைச் சென்று சேருகின்றோம். மிக மிகப் பழைய காலம். முல்லை நிலம். மரங்களடர்ந்த சோலையின் பாங்கர் ஒரு பசும்புற்றரை. புற்றரையிலே பசுக்களும் கன்றுகளும் மேய்கின்றன. கார்காலம்; செடி கொடிகளில் பூக்கள் சொரிந்திருக்கின்றன. இடையனொருவன் வருகின்றான். காலிலே செருப்பு அணிந்திருக்கின்றான். உழைப்பினால் உரமேறிய உடல்; மயிரடர்ந்த தாட்கட்டு, பால் மணம் மாறாத தலைமயிர், அரையிற் கட்டிய ஆடையின் ஒரு தலைப்பினைத் தோளிற் போட்டிருக்கின்றான். பல நிறமாகிய கோட்டுப் பூக்களையுங் கொடிப் பூக்களையும் கலம்பகமாகத் தொடுத்த மாலையொன்று தோளிற் கிடக்கிறது. இடுப்பிலே ஒரு மூங்கிற்குழல் செருகப்பட்டிருக்கிறது. ஒரு கையிலே கோல்; மற்றொரு கையிலே வில்வடிவமான ஒரு பொருள். ஒரு வில்லல்லவா பல விற்கள் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கக் காண்கின்றோம். கண்பகல் காலமாகிறது. இடைச்சி ஒரு குடலையிலே பாலிட்டுக் காய்ச்சிய கூழ் கொண்டு வருகிறாள். இடையன் கூழினை உண்டு சோருகிறான். சிறிதுநேரம் இடைச்சியோடு உரையாடுகிறான். பின்பு கையிலே குழலை யெடுக்கிறான். சில நாட்களுக்கு முன் அம்மூங்கிற்குழல் இடையனுல் இசைக்கருவியாகப் பட்டது. தீக்கடை கோலினாலே, புகையெழக் கை முயன்று தீயைக் கடைந்து கொண்டு அக்கடைகோலினுள்ள தீயினாலே மூங்கிலிலே துளையிட்டான். குழலிலே பாலைப் பண் வாசிக்கிறான். இடைச்சி கேட்டு மகிழுகிறாள்.

அவன் போனபின்பு, வில்வடிவமான கருவியை யெடுக்கிறான். அது ஒரு வில் யாழ். அக்கருவியையும் இடையன் தானே செய்து கொண்டான். உள்ளே துளையுடைய குமிழ் மரக்கொம்புகளை வில்லாக வளைத்து மாலென்னும் மரத்தினது நாரினலே திரித்த கயிற்றினை நாணுகக் கட்டியிருக்கிறான். ஒரே அளவான பதினைந்து விற்களிருக்கின்றன. நாண்கள் மாத்திரம் தாழ்த்தியும் உயர்த்தியும் கட்டப்பட்டனவாய், அளவு வேறுபட்டிருக்கின்றன. இவற்றின் அளவுகளை "எண்ணும் இசையும்" என்னும் அதிகாரத்திலுள்ளே காண்போம். நரம்புகளைத் தெறித்து இசை பெருப்பமையை ஆராய்கிறான்.

மாலைக் காலமாய்விட்டது. குழலிலே முல்லைப் பண் வாசித்துக் கொண்டு பசுக்களையும் கன்றுகளையும் ஓட்டிக் கொண்டு, தன் குடிசைக்குச் செல்லுகிறான். உணவுக்குப்பின் தான் இசைகூட்டி வைத்த வில்யாழினை யெடுத்து இனிய குறிஞ்சிப் பண்ணை வாசிக்கிறான். இடைச்சி மகிழுகிறாள்.

இடையனுடைய வான்முறை எனது சொந்தக் கனவு அல்ல. தலைச் சங்கத்துக்கு முன் நடந்த இச்செய்தியினைக் கடைச் சங்கப் புலவரொருவர் கனவு கண்டு, பெரும்பாணாற்றுப் படையென்னும் நூலினுள்ளே பொறித்து வைத்தார்.

"தொடுதோல் மரீஇய
வடுவாழ் நோனடி
விழுத்தண் டூன்றிய
மழுத்தின் வன்கை
உறிக்கா வூர்ந்த
மறுப்படு மயிர்ச்சுவல்
மேம்பால் உரைத்த
ஓரி ஓங்குமிசைக்
கோட்டவுங் கொடியவும்
விரைஇக் காட்ட
பல்பூ மிடைந்த படலைக் கண்ணி
ஒன்றமர் உடுக்கைக்
கூழ்ஆர் இடையன்
கன்றமர் நிரையொடு கானத்தல்கி
அந்நுண் அவிர்புகை
கமழக் கைம்முயன்று
ஞெலிகோற் கொண்ட
பெருவிறல் ஞெகிழிச்
செந்தீத் தொட்ட
கருந்துளைக் குழலின்
இன்றீம்பாலை முனையிற் குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த
மரல்புரி நரம்பின்
வில்யாழ் இசைக்கும்
விரல்எறி குறிஞ்சிப்
பல்காற் பறவை
கிளைசெத்து ஓர்க்கும்
புல்ஆர் வியன்புலம் போகி."
(பெரும்பாணாற்றுப்படை 169-184)

600 வருஷப் பழமை வாய்ந்தது

பெரிய வைத்தியர் ஒருவரின் ஏட்டிலிருந்து காணப்பட்ட பழைய வைத்திய முறையின்படி புத்தகுரு ஒருவரால் ஒரு மலைக்கோவிலில் இப்போது தயாரிக்கப்படும் 'நேத்திர ரத்தின தைல'முறை 600 வருஷப் பழமை வாய்ந்தது.

"நேத்திர ரத்தின தைலம்" பலநோய்களை மாற்றவல்ல புகழ்பெற்ற எண்ணெயாகும்.

நேத்திர ரத்தின தைலம் நோய்களை
மாற்றப் பேர் பெற்ற
மருந்தெண்ணெய்

இந்தத் தைலத்தை ஒழுங்காகப் பாவித்து வந்தால் கண்குத்து, நீர்வடிதல், கண்சிவப்பு, கண்வலி, ஜலதோஷம், நரம்புவலி, தலைவலி முதலிய நேத்திரத்துக்கும் தலைக்கும் சம்பந்தமான எல்லா வியாதிகளும் சொஸ்தமாகும். கண்பார்வை குன்றியவர்களுக்கும் சமீபபார்வை, தூரப்பார்வை யற்றவர்களுக்கும் இத்தைலம் ஓர் அருஞ் சஞ்சீவியாகும். இது மூளைக்குக் குளிர்ச்சி யளித்துக் கண்நோய்கள் உண்டாகா வண்ணம் தடுக்கும்.

குறிப்பு: இந்த எண்ணெய் மயிர் வளருவதற்கு உத்தரவாதமுடையது.

விலை ரூபா. 2/50
ஏஜெண்டுகள்:- எஸ் மால்ஜீ அமிஜீ
பெரியகடை, யாழ்ப்பாணம்.
Q 115 23.10.41--22-1.42

ஆர்த்திராதரிசனக் கோஷ்டி

இக்கோஷ்டி யாழ்ப்பாணத்திலிருந்து இந்தமாசம் 10-ம் திகதி புதன்கிழமை (24-12-41) புறப்பட்டுச் சேது இராமேசுரம் தஞ்சாவூர் கும்பகோணம் மாயாபுரம் முதலிய ஸ்தலங்களைத் தரிசித்து, சிதம்பரத்தில் 5 நாட்களுக்குத் தங்கித் தரிசனை முடித்துப் பின் மதராஸ் காஞ்சிபுரம் சிறீரங்கம் திருச்சினாப்பள்ளி மதுரை மற்றும் பிரதான ஸ்தலங்களைத் தரிசித்துத் திரும்புகிறது.

இதில் நீங்கள் சேர்ந்தீர்களா?

இல்லாவிடில் உடனே யாழ்ப்பாணம் பெரியகடை இராஜா பில்டிங் S R S நாதனிடம் முழு விபரங்களும் நேரில் அல்லது எழுத்து மூலம் பெற்றுக் கொள்ளுங்கள்.

இந்திய புகையிரத இலாகா இவ்வருடம் மலிவு டிக்கற்றை வழங்காததால் ஆயிரக்கணக்கான சிவநேயர்களுக்கு இந்த ஓர் அருந்தருணம். உணவு உட்படச் சகல வசதிகளுஞ் செய்து கொடுக்க ரூபா 70—00

யாத்திரைக்கெனப் பிரத்தியேகமாகத் தென்னிந்திய றெயில்வேயிலிருக்கும் பெட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இதிற் சமையற் பாகம் ஆசாரப்படி யாழ்ப்பாணத்தாரால் தயார்செய்து வழங்கப்படும்

Mis 155 18&22-12-41

மகளிர் ஒழுக்கம்

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

கால அறிஞர்கள் அவர்களை யாதாரமாகக்கொண்டு இலக்கண முறை பிறழக் கூறிய நீதிக் கூற்றுக்களும் தவறிழைக்கவில்லை. பின்னைத் தவறியவர் யாவர் எனின், நீதிநூல் திட்பத்தை அறியாமல் பெண்களை அறியாமை யென்னும் அந்தகாரத்துள் அடக்கி வைத்த பிற்காலத்தவரும், பிற்கால அறிஞர் [illegible] பெண்களுக்கு [illegible] வேண்டுமென்று [illegible] இக்காமல், பெண்ணியல்புக்குதவாத கருமங்களில் ஆக்கை ஈடுபடுத்தி வசையைத் தேடிவிடும் இக்காலத்தவர்களுமேயாவர்.

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு ஏன்? என்றார்கள் அவர்கள். ஆடவருடன் கைகோத்து நின்று அரங்கத்தில் ஆடுவதற்கு என்கிறார்கள் இவர்கள்.

பெண்கள் படிப்பது தாம் விரும்பிய காதலருக்குக் களவு கடிதம் எழுதவோ? என்றார்கள் அவர்கள். பெண்மக்களை வரையின்றி ஆடவருடன் கலந்து பழகச் சந்தர்ப்பத்தை ஆக்கிவிடுதலே மணவரைத் தேடிக் கொள்வதற்குச் சிறந்த முறையான நாகரிகம் என்கிறார்கள் இவர்கள்.

பெண்களை மக்கட்பேற்றிற்குரிய சாதனங்கள் என்று மாத்திரம் நினைந்தார்கள் அவர்கள். ஆடவர் செய்யும் எல்லாச் செயல்களையும் மகளிர் ஏன் செய்யமுடியாது என்று நினைக்கிறார்கள் இவர்கள்.

இவ்வாறே இவ்விரு பகுதியாருடைய கூற்றுக்களையும் செயல்களையும் ஆராயப் புகுந்தால் மிகவிரியும். இவ்விரு பகுதியாரும் சனசமூகத்தை நேரான வழிக்கு மாறுபட்ட இரு அந்தங்களுக்கு இழுத்துச் செல்பவராவர். ஆதலின், பெண்பாலாரை வழி நடத்தற்குச் சனசமூகத்துக்குரிய நேரான வழி யாது? என ஆராய்வாம்.

எப்படிப்பட்டவள் பெண்ணுவள்?

"தற்காத்துத் தற்கொண்டாற்
பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்றார் பெருநாவலர். தன் கற்பு நெறியினின்றும் வழுவாமல் தன்னைக் காப்பவளே பெண். கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை. நீதிநூல்கள் கூறிய ஒழுக்கத்திற்கு மாறுபாடின்றி ஒழுகுவதே கற்பாகும். நீதி நூல்கள் [illegible] கூறின.

'கணவனே கண்கண்ட தெய்வம்'.
'குலமகட்கு அழகு தன் கொழுநனைப் பேணுதல்'
'தெய்வந் தொழாஅள் கொழுநற்
றொழுதெழுவாள் பெய்யெனப்
பெய்யுமழை',
'பெண்ணிற் பெருந்தக்க யாவுள
கற்பென்னுந் திண்மையுண்டாகப்
பெறின்'

எனப்பல, (தொடரும்)

விசேஷ அறிவித்தல்

சம்பூரண கைரேகை பலன், ஆருடம் (சிந்தனை சாஸ்திரம்) முதலிய சாஸ்திர சம்பந்தமான எல்லா விஷயங்களையும் கீழ்க் காண்பவரிடம் அறிந்து கொள்ளலாம்.

கிரகஸ்புடம், தச வர்க்கம், அஷ்டவர்க்கம், பாவநிலை முதலிய கணித வகைகளும், மகா தெசா புத்தி பலன், துவாதச பாவபலன், கோசரபலன், கால சக்கரபலன் முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா 10/—

நா. சின்னத்துரை
போக்கத்தை,
கைதடி வடக்கு, கைதடி.
Y 67 20-7-41—19-7-42

ஆறுமுகநாவலர்
பதிப்புப் புத்தகங்கள்

ஆறுமுகநாவலரவர்கள் பதிப்பு நூல்களை இலங்கையில் விற்பனை செய்வதற்கு வே. கந்தசாமி என்பவரைச் "சோல் ஏஜன்ற்" ஆக நியமித்திருக்கிறோம். மேற்குறித்த வியாபார ஸ்தலம் இந்துசாதன ஆபீசிற்கு முன்னுறுள்ளது. இன்று தொடங்கி நாவலரவர்கள் பதிப்பு நூல்களுக்குரிய ஓடர்களை இந்தியாவுக்கனுப்பாது கீழ்க்காணும் விலாசமுள்ள புத்தகசாலைக்கே அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

விலாசம்:-
V. Kandasamy
Jaffna Tamil Book Depot
VANNARPONNAI.
Q 134 17. 11 .41 16. 2. 42

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

† இசைத்தட்டுகள்

செவ்வாய் டிசம்பர் 23

காலை 7-30 தோரம்பம் † 7-40 தமிழில் செய்திகள் 7-50 எம். சுப்பையா முதலியார் பாட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 இன்னிசை † 9-00 ஒலிபரப்பு முடிவு

1-00 திரைகானம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 வி. ஸ்ரீகண்ட ஐயர் வீணை 2-00 தமிழில் செய்திகள் 2 05 எம். சுப்பையா முதலியார் பாட்டு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 வி ஸ்ரீகண்ட ஐயர் வீணை 5-45 இசைப்பயிற்சி 6-00 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 6-05 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 6-30 வானொலி வைத்தியகோஷ்டி 7-00 யுத்த முயற்சி 7-05 ஓ ராமச்சந்திரராவ் † 7-15 நாமும் யுத்தமுயற்சியும் பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 மதராஸிலுள்ளபடி பாருபள்ளி ராமகிருஷ்ணையா பந்துலு பாட்டு 9-15 லீலா சிட்னிஸ் † 9 20 ஆங்கிலத்தில் செய்திகள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 45 இடைவேளை † 9-55 யுத்த விமரிசனம் (பி பி. அஞ்சல்) 10-00 ஒலிபரப்பு முடிவு.

புதன் டிசம்பர் 24

காலை 7-30 தோரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 ஸ்ரீமதி எஸ். ஜானம்மா பாட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 சினிமா கீதங்கள் † 9 00 ஒலிபரப்பு முடிவு

1-00 இன்னிசை † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸ்ரீமதி. எஸ். ஜானம்மா பாட்டு 2-30 ஒலிபரப்பு முடிவு

மாலை 5-00 எ. கே. கணேசபிள்ளை பாட்டு 5-45 கிறிஸ்துமஸ் தினம் கிறிஸ்தவ மத தமிழ் இசைநிகழ்ச்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-30 கும்பகோணம் டி. எல். சம்பந்தம் பிள்ளை வயலின் 7-00 செய்தி விளக்கம் 7 15 செயின்ட் ஜான் தேவாலய பாடகர்கள் மிஸ்டர் இ ஆல்பர்ட்ஸ் எம். ஏ. ப்யூக்ஸ் 7-35 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 எ கே. கணேசபிள்ளை நாகஸ்வரம் 8-45 கும்பகோணம் உ. எல். சம்பந்தம் பிள்ளை வயலின் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை † 9-55 யுத்த விமரிசனம் (பி. பி. ஸி. அஞ்சல்) 10-00 ஒலிபரப்பு முடிவு.

வியாழன் டிசம்பர் 25

காலை 7-30 தோரம்பம் † 7-40 தமிழில் செய்திகள் 7-50 எம் பாலகிருஷ்ணன் பாட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 மாதர் இன்னிசை † 9-00 ஒலிபரப்பு முடிவு

1 00 டாக்கி கீதங்கள் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஜீ சாரங்கபாணிச் செட்டியார் பாட்டு 2 00 தமிழில் செய்திகள் 2-05 காரைக்குடி ஸ்ரீமதி சங்கரி வீணை 2-30 ஒலிபரப்பு முடிவு

மாலை 5-00 ஜீ. சாரங்கபாணிச்செட்டியார் பாட்டு 5 45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராம நிகழ்ச்சிகள் 6-30 காரைக்குடி ஸ்ரீமதி சங்கரி வீணை 7-00 நடைமுதல் நிகழ்ச்சி 7-15 நமது போர்முனை 3 யுத்த வீரர்களின் பாதுகாப்பு 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள். 8-00 மகாராசபுரம் விசுவநாதையர் பாட்டு டி. கே. ராஜப்பா வயலின் உமையாள்புரம் என். கணேசையர் மிருதங்கம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9 45 இடைவேளை † யுத்த விமரிசனம் 10-00

சரத்பாபுவுடன் பேட்டி

கல்கத்தா, டிச 13—

வங்கப் பிரதம மந்திரி கனம் பஸ்லுல்ஹக்கும், மந்திரி டக்டர் முக்கர்ஜியும் இன்று முதன்முதலாக அரசாங்கக் காரியாலயத்துக்குச் சென்றனர். அங்கு உள்நாட்டிலாகா உதவிக் காரியதரிசி அவர்களை வரவேற்றார். அதன்பின், மந்திரிகள் இருவரும் அலிப்பூர்ச் சிறைக்குச் சென்று அங்கு காவலில் இருக்கும் ஸ்ரீ சரத்சந்திர போஸிடம் சம்பாஷித்தார்கள்.

மோல்மீனுக்கருகில் விமானம்

அடையாளந் தெரியவில்லை

றங்கூன் டிச, 14—

மோல்மீனுக்கு ஏறக்குறைய 40 மைல் தூரத்தில் அடையாளந் தெரியாத ஒரு விமானம் பறந்து வந்ததால் நேற்றிரவு றங்கூனில் விமான எதிர்ப்பு எச்சரிக்கை அளிக்கப்பட்டது. இதுதவிர, வேறு விசேஷம் இல்லை என இராணுவ இலாகாத் தலைமை அதிகாரி அறிவிக்கிறார்.

வாதம், சலரோகம், குன்மம், முதலிய
எந்த
வியாதியானாலும்
உத்திரவாதத்துடன்
குணப்படுத்தப்படும்
சுகாதார மாஜி மந்திரி கனம் Dr. T S S. ராஜன்
ஸ்ரீ. S. சத்தியமூர்த்தி M. L. A.
Dr C. சபாபதி, M. B. C. M.
M R. C. S. L R C. P.
முதலிய பலரால் புகழ்ந்து நற்சாட்சிப்பத்திரம் அளிக்கப்பட்டன. நேரில் அல்லது தபால்மூலமாய்ச் சிகிச்சை பெறவும்
Dr. K. S. Paripurnananda
Regd. MEDICAL Practitioner
R K. S. Vaidyasala
Palaly Rd. Kandarmadam
JAFFNA
Q 129 6-11-41—5-2-42

N. வைத்திலிங்கம்
& கம்பெனி
பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள்
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சிமெந்து வகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.
கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo.
Telephone No. 30.
(Y 20— 1-4-41—31-3-42) தி

விளம்பர விகிதம்
முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 10.00 அரைக்கலம் ரூபா [illegible]
கால்கலம் ரூபா 4.00 ஒரு அங்குலம் ரூபா 1.00
அடுத்த முறைகட்கு மேற்படி
விகிதங்களிற் பாதி
காலம் குறித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாம். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் சேர்க்கப்படமாட்டா.

பத்திரக்கிரயம்
வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினத்துக்குள் [illegible]
தமிழ் ரூபா 5.00 இங்கிலீசும் தமிழும் 9.00
இலங்கை இந்தியா 8.00 இங்கிலீசும் தமிழும் 12.00
தொலைவாய் பகுதி 9.00 இங்கிலீசும் தமிழும் 13.00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமாக
அனுப்பப்படல் வேண்டும்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday December 22nd 1941.